திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

## பரல் - 08

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் - 2025

கண்ணகி கலை இலக்கியக் கூடல்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கூடல்

## பரல் – 8

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2025

**மண்முனை தென்மேற்குப் பிரதேசம்**
**மட்டக்களப்பு மாவட்டம்**
**25,26, 27, 28 செப்டம்பர் 2025**

**1ஆம் நாள் : 25.09.2025**

போர்த் தேங்காய் அடித்தல்

மகிழடித்தீவு ஸ்ரீ சித்தி விநாயகர் அருள்மிகு கன்னகி அம்மன் ஆலயம்

**2ஆம் நாள் : 26.09.2025**

கொம்பு வரிதலும் உருக்கொடுத்தலும்

முதலைக்குடா ஸ்ரீபாலையடி விநாயகர் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்

கொம்புமுறி விளையாட்டு

முனைக்காடு ஸ்ரீசித்தி விநாயகர் அருள்மிகு கணணகி அம்மன் ஆலயம்
முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டு மைதானம்

**3ஆம், 4ஆம் நாள்: 27/28.09.2025**

தொடக்க விழா / நிறைவு விழா

மண்முனை தென்மேற்குப் பிரதேச கலாசார மண்டபம், மகிழடித்தீவு

**விழாமலர் அனுசரணை**

**அமரர் ஆ.சிவஞானம் மற்றும் அமரர் சி.நேமிகரன் ஞாபகார்த்தமாக**
திருமதி மங்களேஸ்வரி சிவஞானம் (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியை) குடும்பத்தினர்,
முதலைக்குடா

## கண்ணகி கலை இலக்கியக் கூடல், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

பரல் – 8

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2025


**தொகுப்பாசிரியர்**

**கதிரவன் த. இன்பராசா**

**மலர்க்குழு**

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்

அ.அன்பழகன் குரூஸ்

ச.பா.மதன்

ப.குணசேகரன்

பேராசிரியர் சு.சிவரெத்தினம்

க.கணேசராஜா

**படங்கள்**

அ.அன்பழகன் குரூஸ்

ச.பா.மதன்


## கூடலில் கூடுவோம்

பத்தாவது கண்ணகி கலை இலக்கிய விழா இம்முறை மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் கால்பதித்துள்ளது. கண்ணகி கலை இலக்கிய கூடல் நிறுவப்பட்டதன் நோக்கத்தையும் கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் கட்டமைக்கப்பெற்றதன் குறிக்கோளையும் நோக்கி இவ்விழா மக்கள்மயப்படுத்தப் பெற்றுவருவதன் அடையாளமாக இந்த விழா இவ்வருடம் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் கால்பதித்துள்ளது எனலாம்.

மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றில் மண்முனை தென்மேற்குப் பிரதேசமும் இங்கே பதியாக அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் வரலாற்றுப் பிரசித்தி பெற்றவை இப்பிரதேசம் மட்டக்களப்பு மாநிலத்தை ஆட்சிசெய்த அரசி உலகநாச்சியாரின் அரசிருக்கை இருந்த இடமாகவும் கருதப்பெறுகிறது. இவ்வாறான வரலாற்றுப் பெருமையும் ஆன்மிக எழுச்சியும் கொண்ட மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பத்தாவது கண்ணகி கலை இலக்கிய விழா கால்பதித்துள்ளமை எமது கடந்த பதினைந்து வருடகாலப் பயணத்தில் ஒரு மைல்கல்லாகும்.

கிழக்கிலங்கையில் அருகி வருகின்ற விடயங்களான போர்த்தேங்காய் அடித்தல், கொம்புமுறி விளையாட்டு நிகழ்வுகளும் இவ்விழாவின் கூறுகளாக அமைந்துள்ளமை இவ்விழாவுக்கு முடிசூட்டுகின்றது.மட்டுமல்லாமல் இவ்விழாவின் நிறைவு நாளன்று ஏற்பாடு செய்யப்பெற்றுள்ள 'கூத்துக்களரி' இவ்விழாவுக்குப் பெறுமதிசேர்க்கும் பிறிதோர் பரிமாணமாகும்.

இவற்றை மனங்கொண்டு சாதி, மத, வர்க்க, பால், பிரதேச, அரசியல்வேறுபாடுகளையெல்லாம் கடந்து இப் பத்தாவது கண்ணகி கலை இலக்கிய கலை இலக்கிய விழாவில் 'கூடலில் கூடுவோம்' என கண்ணகி கலை இலக்கியக் கூடலின் சார்பாக அனைவரையும் அன்போடு அழைக்கிறேன்.

**அன்பழகன் குரூஸ்**

செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்


**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**

இல. 45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு

0771900614, 0777492861, 0759175981

KannahiVizha@gmail.com www.KannahiKoodal.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்



தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின. சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி 'கண்ணகையம்மன்' என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.



இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப் படுத்தப்படுகின்றது. இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற 'கண்ணகி இலக்கிய விழா 2011' இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி கோமேதகவல்லி செல்லத்துரை அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' கீதம்

**பல்லவி**

கூடலிலே நாமொன்றாய்க் கூடுவோமே!
கூடிநின்று கூடல் கீதம் பாடுவோமே!

**அனுபல்லவி**

'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' அமைத்தோம்!
கூடலிலே கூடுதற்குப் பாடல் சமைத்தோம்!
ஆண்டுதொறும் ஆங்காங்கே விழாக்கள் வைத்து
ஆயகலை இலக்கியங்களுக் கரங்கு கண்டோம்!

**சரணம்**

தித்திக்கும் தேனாடு எங்கள் தேசம்!
திக்கெட்டும் வீசுமெம் கலையின் வாசம்!
பத்தினித்தாய் கண்ணகிதாள் பரவி நின்றோம்! - உயர்
பண்பாட்டுத் தளத்தினிலே தலை நிமிர்ந்தோம்!

வஞ்சகமே இல்லாத வாழ்வு படைத்தோம்!
வந்தாரை வாஞ்சையுடன் வாரி அணைத்தோம்!!
விஞ்சுகின்ற அளவினிலே வீரம் விளைத்தோம்! - அற
விழுமியங்கள் வளர விதை மண்ணில் விதைத்தோம்!

கொம்புமுறி விளையாட்டு, கரகம், கும்மி
கூத்துடனே காவடியும் குரவை மற்றும்
வம்புநிறை 'மகிடி'யுடன் வசந்தன் ஆட்டம்
வஞ்சியரின் 'பரதம்' எனக் கலைகள் நீளும்!

'வழக்குரை'யாம் காவியத்தை வணங்கிப் போற்றி
வளமான குளிர்த்தியை நாம் வாழ்வில் ஏற்றோம்!
கிழக்கிலங்கைத் தமிழ் மண்ணின் காவல் தெய்வம்
கீர்த்தி நிறை கண்ணகித்தாய் வாழ்க! வாழ்க!

ஆக்கம்: செங்கதிரோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்"

'கூடல்' குடும்ப (தாய்ச்சங்க) உறுப்பினர் விபரம் – 2025

**காப்பாளர் :** பேராசிரியர் சி.மௌனகுரு
45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை, மட்டக்களப்பு. 0773405414, 0652223053

**துணைக் காப்பாளர் :** எஸ். எதிர்மன்னசிங்கம்
22,5ம் குறுக்கு, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம்,மட்டக்களப்பு. 0772029888

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே. எண் |
|---|---|---|---|
| 01 | தம்பியப்பா கோபாலகிருஸ்ணன். (தலைவர்) | 607, பார்வீதி, மட்டக்களப்பு. | 0771900614 |
| 02 | அ.அன்பழகன் குரூஸ். (JP) (செயலாளர்) | 45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0777492861 |
| 03 | ச.ஜெயராஜா. (பொருளாளர்) | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0777249729 |
| 04 | மாணிக்கப்போடி சதாசிவம். (JP) (துணைத்தலைவர்) | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0757735507 |
| 05 | அரிமா கலாநிதி அ.செல்வேந்திரன் (துணைத்தலைவர்) | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. | 0773618402 |
| 06 | கதிரவன் த.இன்பராசா (JP) (இணைப்பாளர்) | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு - EP. மட்டக்களப்பு. | 0754265201 |
| 07 | திருமதி. சுந்தரமதி வேதநாயகம். (துணைச்செயலாளர்) | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0652225090 |
| 08 | ச.மதன் | முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை | 0773620328 |
| 09 | க.செல்வானந்தம். | 194, கல்லுலூரிவீதி, அக்கரைப்பற்று - 07 | 0771272984 |
| 10 | ஆர்.சயனொளிபவன் | 90, கண்ணகியம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0774368089 |
| 11 | வ.ஜயந்தன். | சந்தை முன் வீதி, தம்பிலுவில். | 0775024968 |
| 12 | ம.வேதநாயகம். | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0718112652 |
| 13 | செ.துரையப்பா. | 4, முதலியார் வீதி, மட்டக்களப்பு. | 0652222547 |
| 14 | திருமதி அசோகாம்பிகை ஜோகராசா (மண்டூர் அசோகா) | 8/22, பிள்ளையார்கோவில் கல்லடி, மட்டக்களப்பு. | 0771026140 |
| 15 | திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம். | 25/2, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0771768830 |
| 16 | இ.பாக்கியராஜா | 10/4, 1ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு, | 0779068411 |
| 17 | அ.குலேந்திரராஜா. | விபுலாநந்த வீதி, புதுக்குடியிருப்பு (கி.மா) | 0778163717 |
| 18 | ப.குணசேகரன் | வன்னியர் வீதி, களுதாவளை -01. | 0777626105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே. எண் |
|---|---|---|---|
| 19 | மு.மகேந்திரராசா. | பழைய டி.ஆர்.ஓ ஒழுங்கை, செங்கலடி. | 0779415620 |
| 20 | மா.சசிகுமார் | 114/1. ஜெயந்தி வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு. | 0772350374 |
| 21 | எந்திரி வ.கருணநாதன் | சாண்டோ சங்கரதாஸ் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு. | 0773876361 |
| 22 | மா.திருநாவுக்கரசு | நாவலர் வீதி, குருக்கள்மடம். | 0652250292 |
| 23 | மு.விநாயகமூர்த்தி | 191/23, பார்வீதி, மட்டக்களப்பு. | 0776044810 |
| 24 | திருமதி. பிரியா கருணாகரன். | 8/21, 1ம் குறுக்கு. பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0770303550 |
| 25 | சிவ.வரதகரன் | 163, திருமலை வீதி, மட்டக்களப்பு. | 0771530901 |
| 26 | இரா.கலைவேந்தன் | 71, தண்ணீக் கிணற்றடி வீதி, பாலமீன்மடு, மட்டக்களப்பு | 0776746922 |
| 27 | ஜீ.எழில்வண்ணன். | 32/2, கூட்டுறவுக் கடை வீதி, கிரான்குளம். | 0771995932 |
| 28 | ஆ.தனுஷ்கரன் (சோலையூரான்) | கொக்கட்டிச்சோலை. | 0779008943 |
| 29 | து.நகுலேஸ்வரன். | 218, சர்வோதய வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு | 0776168859 |
| 30 | பேராசிரியர் சு.சிவரெத்தினம் | பிரதான வீதி, களுதாவளை - 01 | 0770075898 |
| 31 | அழகப்பன் தனுராஜ் | அம்பிலாந்துறை, கொக்கட்டிச்சோலை | 0750337860 |
| 32 | க.டிஷாந்த் | கன்னன்குடா | |
| 33 | பு.தியாகதாஸ் (புதுவையூர் தியாகதாஸ்) | புதுக்குடியிருப்பு | 0750682244 |
| 34 | சி.சுதேஸ்வரன் | புதுக்குடியிருப்பு | 0758944878 |
| 35 | த.யுவராசா (தங்கயுவன்) | புதுக்குடியிருப்பு | 0757510863 |
| 36 | திருமதி நர்மதா அகளங்கன் | களுதாவளை | |
| 37 | எஸ்.பி.நாதன். | “பொதிகை”, V.C.வீதி, தம்பிலுவில் -02. | 0779230682 |
| 38 | சட்டத்தரணி க.தவராஜா | 515/41, திருமலை வீதி, மட்டக்களப்பு | 0752869984 |
| 39 | சௌந்.லெனாட்லோரன்ஸே | தாழங்குடா-02 | 0772276543 |
| 40 | வைத்திய கலாநிதி க.முருகானந்தம் | கல்லடி, மட்டக்களப்பு | 0714471081 |
| 41 | த.கைலாயப்பிள்ளை | நாவலர் வீதி, விபுலானந்த இல்லம், அக்கரைப்பற்று | 073664282 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசம்



புதுக்குடியிருப்பு கண்ணகையம்மன் சடங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அது 2011 ஆம் ஆண்டு. நான் கண்ணகையம்மன் கோயிலடியில் நிற்கின்றேன் சதாசிவம் மாமா வருகின்றார். "இன்று பின்னேரம் பிற்பகல் நான்கு மணிக்குக் கூட்டம் ஒன்று இருக்கிறது போவோமா" - நான் மறுப்புச் சொல்லவில்லை 'வருகின்றேன்' என்றேன். மீண்டும் அவராக ஆரம்பித்தார். "கண்ணகி இலக்கிய விழா செய்வது சம்பந்தமான கூட்டம் - ஆறுமுகம் செங்கதிரோன் எல்லோரும் வருவார்கள்" செங்கதிரோன் என்றதும் 'செங்கதிர்' சஞ்சிகையும், 2008 ஆம் ஆண்டு செங்கதிரோனைத் தேடி மட்டக்களப்பிற்குச் சென்றதும், அதன் பிற்பாடு அவரோடு இணைந்து பல கலை இலக்கிய நிகழ்வுகளில் செயற்பட்டதும் மேலும் எனக்கு உற்சாகத்தைக் கொடுக்க செங்கதிரோன் உடன் இணைந்து கண்ணகி இலக்கிய விழா நடத்துவது என்றால் அது சிறப்பாக இருக்கும் என்று என் மனதில் பட்டது. சதாசிவம் மாமாவிடம் எனது வருகையை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

2011 ஆம் ஆண்டு கண்ணகி இலக்கிய விழா மட்/மகாஜன கல்லூரியில் மிகச் சிறப்பாக இடம் பெற்றது. தனியாக நுழைந்த நான் கதிரவன் கலைக் கழகத்தையும் கண்ணகி இலக்கிய விழாவோடு இணைத்துக் கொண்டேன். முதலாவது விழாவினை நடத்துவதில் கதிரவன் கலைக் கழகம் முழுமூச்சாக செயற்பெற்றதை கூடல் செயலாளரின் நன்றியுரை உறுதி செய்தது.

இத்தகைய பாராட்டுகள், கூடலில் உள்ளோரின் தன்னலமற்ற செயற்பாடுகள் குறிப்பாக கூடல் தலைவரின் உயர்ந்த தலைமைத்துவப் பண்பு கூடலோடு இணைந்து செயற்பட, இன்னும் பலரை இணைத்துக் கொள்ள மனம் இடம் கொடுத்தது.

2011 இல் செங்கதிர் சஞ்சிகையே (ஆனிமாத இதழ்) கண்ணகி இலக்கிய விழாவினுடைய சிறப்பிதழாக வெளிவந்தது. 2012 இல் கண்ணகி கலை இலக்கிய விழாவினை புதுக்குடியிருப்பில் நடத்த நாங்கள் தீர்மானித்தோம். அந்த விழாவில் கூடல் பரல்-01 அன்புமணி ஐயாவை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு நகரத்திலிருந்து நகர்த்தப்பெற்ற கண்ணகி கலை இலக்கிய விழா கிராமங்கள் தோறும் நடத்தப்பெறுவதற்கு வித்திட்டது புதுக்குடியிருப்பு விழா.

2013இல் இருந்து கண்ணகி கலை இலக்கிய விழாவின் கூடல் தொகுப்பாசிரியராக பொறுப்பேற்று இன்று பத்தாவது விழா மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் நடைபெறும் இச் சந்தர்ப்பத்தில் கூடல் பரல்-08 உங்கள் கரங்களில் எழுந்து நிற்கின்றது. இதுவரை கூடல் ஏழு பரல்களுக்குத் தொகுப்பாசிரியராகச் செயற்பெற்றதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இந்த மகிழ்வின் பின்னணியில் கூடல் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட கூடல் குடும்பம் அவ்வப்போது விழா நடத்த உருவாக்கப்பெற்ற விழாக்குழுவினர், வணசிங்கா அச்சகத்தினர், ச.பா. மதன் தற்போது இணையும் காந்தள் அச்சகம், இன்னும் பலர் இருக்கின்றார்கள் என்பதை நினைவு கூருகின்றேன்.

புதுக்குடியிருப்பில் இரண்டாவது விழா நிறைவடைந்ததும் படுவான்கரைப்பெருநிலப் பிரதேசத்தில் கண்ணகி கலை இலக்கிய விழாவினை நடத்த வேண்டும் என்கின்ற எண்ணம் எல்லோர் மத்தியிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டது. அதிலும் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் கண்ணகையம்மன் ஆலயங்கள் இருக்கின்ற ஏதாவது ஒரு இடத்தை மையமாக வைத்து நடத்த வேண்டும். என்பதே எல்லோரதும் சிந்தனையாக இருந்தது.

ஆனால் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு விழா நிறைவடைந்ததும் கண்ணகையம்மன் ஆலயங்கள் இருக்கின்ற சகல பிரதேசங்களிலும் இருந்து கண்ணகி விழா நடத்துவதற்கான அழைப்பு வந்து கொண்டேயிருந்தது. எப்படியோ ஒவ்வொரு இடங்களாக விழா நகர்ந்தது. சிறப்பாக நடந்தது.

எட்டாவது விழா களுதாவளையில் விழாக்குழுத் தலைவர் ப.குணசேகரன் தலைமையில் பிரம்மாண்டமாக நடைபெற்றுச் சிறப்புப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஒன்பதாவது விழா காரைதீவில் இடம்பெற முனைப்புப் பெற்றிருந்தபோதும் இழுபறியாக இருந்த காலதாமதம் காரணமாக உடனடியாகக் கல்லடி துளசி மண்டபத்திற்கு ஒருநாள் விழாவாக மாற்றபெற்றது. இவ் இரண்டு விடயங்களையும் இதனை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால். களுதாவளையின் பிரம்மாண்டமான விழாவும், கல்லடி துளசி மண்டபத்தின் ஒருநாள் விழாவும் இணைந்ததே இந்த கூடல் பரல்- 08.

இருந்தும் பத்தாவது விழாதான் மண்முனை தென்மேற்கில் இடம்பெற வேண்டும் என்று ஒரு நியதி இருந்திருக்கின்றது. கல்லடி துளசி மண்டப விழா நிறைவடைந்ததும் சோலையூரான் ஆ.தனுஷ்கரனும், கூடல் பொருளாளர் ஜெயராஜா அவர்களும் மண்முனை தென்மேற்குப் பிரதேச விழா பற்றிப் பேசினார்கள்.

2019 இக்கு பிறகு அது கைகூடவில்லை. ஐந்து ஆண்டுகள் நாட்டின் நிலவரம், பெரும் கொரோனா தொற்றுடனும், விலைவாசியுடனும் சங்கமித்ததினால் கண்ணகி விழா ஐந்து ஆண்டுகள் ஓய்வு கண்டது. இருந்தும் இந்த ஐந்து ஆண்டுகளும் தலைவரும், கூடலும் இந்த விழா நடத்துவது சம்பந்தமான எண்ணத்துடனே இருந்தார்கள். அது இன்று 10ஆவது விழாவாகக் கைகூடியுள்ளது.

அதிக பக்கங்களைக் கொண்ட அழைப்பிதழும் அச்சிடப்பெறுவதுடன், அதிகமான அதிதிகள் பங்குபற்றுவதும் அதிகமான அமர்வுகள் இருப்பதும் அதிகமான மக்கள் பங்குபற்றுவதும் முத்தமிழ் நிலைத்து நிற்பதும் இந்த விழாவில்தான் என்றால் எல்லோரும் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

அதிலும் மண்முனை தென்மேற்கு பத்தாவது விழா, நான்கு நாட்கள் முழுமையாக இடம் பெற்று (25,26,27,28 செப்டெம்பர்-2025) நான்காவது நாள் இரவு விடிய விடிய கூத்தாடப் பெறுவதும் மிகச் சிறப்பாக அமைகின்றது. அதைவிட மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் இருக்கின்ற சகல கிராமங்களும் இந்த விழாவோடு இணைந்து கொள்வதும் சிறப்பம்சமாகும்.

கூடல் பரல்-08 வெளி வர சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைவரையும் இதயத்தில் இருத்திக் கொண்டு எதிர்வரும் ஆண்டு பதினோராவது விழாவில் ஒன்பதாவது பரலில் சந்திக்கும் வரை....

**கதிரவன் த.இன்பராசா**
*தொகுப்பாசிரியர் 'கூடல்'*
*இணைப்பாளர், கண்ணகி கலை இலக்கிய கூடல்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி கலை இலக்கிய விழா - 2025
## விழாக்குழு - மண்முனை தென்மேற்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" - 'கூடல்' குடும்ப (தாய்ச்சங்க) உறுப்பினர்கள்



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக):** கதிரவன் த.இன்பராசா (இணைப்பாளர்), அரிமா கலாநிதி அ.செல்வேந்திரன் (துணைத் தலைவர்), திரு.ச.ஜெயராஜா (பொருளாளர்), திரு.அ.அன்பழகன் குரூஸ் (செயலாளர்), செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் (தலைவர்), திரு.மா.சதாசிவம் (துணைத் தலைவர்), திரு.ம.வேதநாயகம், திரு.மு.மகேந்திரராஜா. **பின்வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக):** திரு.மா.சசிகுமார், திரு.அ.குலேந்திரராஜா, திரு.செ.துரையப்பா, திரு.து.நகுலேஸ்வரன், எந்திரி வ.கருணநாதன், திரு.மா.திருநாவுக்கரசு, புதுவையூர் பு.தியாகதாஸ், திரு.ஆர்.சயனொளிபவன், திரு.ஜீ.எழில்வண்ணன், திருமதி அசோகாம்பிகை யோகராஜா, திருமதி சுந்தரமதி வேதநாயகம் (துணைச் செயலாளர்). **படத்தில் இல்லாத கூடல் உறுப்பினர்கள்:** திரு.இ.பாக்கியராஜா, பேராசிரியர் சு.சிவரெத்தினம், திருமதி பிரியா.கருணாகரன், திரு ப.குணசேகரன், திரு ச.மதன், வைத்தியர் கே.முருகானந்தம், திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம், திரு சிவ.வரதகரன், திரு இரா.கலைவேந்தன், திரு த.யுவராஜா, திரு.அ.தனுராஜ், திரு. சி.சுதேஸ்வரன், திரு.த.டிக்ஷாந்தன், திரு க.செல்வானந்தம், திரு மு.விநாயகமூர்த்தி, திரு வ.ஜெயந்தன், திரு த.கைலாயப்பிள்ளை, திரு.ஆ.தனுஸ்கரன் (சோலையூரான்), திருமதி நர்மதா அகளங்கன், திரு.S.P.நாதன், சட்டத்தரணி க.தவராஜா, திரு.சௌந் லெனாட் லோறன்ஸோ



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## நிகழ்ச்சித் தொகுப்பு

2018 செப்டெம்பர் 07, 08, 09 ஆகிய தினங்களில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்எருவில் பற்றுப் (களுவாஞ்சிகுடி) பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றல் மற்றும் களுதாவளை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் - "கண்ணகி கலை இலக்கிய விழா-2018" இன் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**தொகுப்பாசிரியர் கதிரவன் த.இன்பராசா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்தேங்காய் உடைத்தலும் கொம்புமுறி விளையாட்டும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்புமுறி விழா – ஏற்பாட்டுக்குழு

**இணைப்பாளர்** : திரு.சோ.கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை தபால் அதிபர்)

**உறுப்பினர்கள்** : திரு.த.கந்தப்பன்
திரு.இ.கதிரவேற்பிள்ளை
திரு.இ.புவனேந்திரகுமார்
திரு.சி.யோகராஜா
திரு.ப.சந்துரு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 செப்டெம்பர் 2018, சனிக்கிழமை காலை

## தொடக்க விழா (காலை 7.00 - பி.ப 1.40)

### பண்பாட்டுப் பவனி (காலை 7.00 - மு.ப 9.00)

தெற்கே துறைநீலாவணை, கோட்டைக்கல்லாறு, மகிழூர், எருவில், மற்றும் களுவாஞ்சிகுடி கண்ணகியம்மன் ஆலயங்களிலிருந்து ஆலயத் தலைவர்களின் தலைமையில் களுவாஞ்சிக்குடி கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது.

வடக்கே செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்திலிருந்து ஆலயத் தலைவரின் தலைமையில் புறப்பட்ட பவனி தேற்றாத்தீவு கொம்புச் சந்திப் பிளளையார் ஆலய முன்றலை அடைந்தது, பின்னர் இரு அணிகளும் அவ்வவ் இடங்களிலிருந்து நடைபவனியாகப் புறப்பட்டு விழா மண்டபத்தை அடைந்தன.

| ஆலயத் தலைவர்கள் | பண்பாட்டுப்பவனி இணைப்பாளர்கள் |
|---|---|
| துறைநீலாவணை - திரு.மு.தருமரெத்தினம் | திரு. த.கணேசமூர்த்தி |
| கோட்டைக்கல்லாறு - திரு.மு.தம்பிராசா | திரு. த.ஜயேந்திரராஜா |
| எருவில் - திரு.மா.சுந்தரலிங்கம் | திரு. மு.இளைஞன் |
| மகிழூர் - திரு.இ.விவேகானந்தராசா | திருமதி ஏகாம்பரம் டிமாலினி |
| களுவாஞ்சிகுடி - திரு.அ.கந்தவேள் | திரு. கு.நாகேந்திரன் |
| செட்டிபாளையம் - திரு.பா.கௌதமன் | திரு. ந.புவனசுந்தரம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை அமர்வு (மு.ப 9.00 - 11.00)

## "கூலவாணிகன் சாத்தனார் அரங்கு"

தலைமை : திரு.ப.குணசேகரன் (விழாக்குழுத் தலைவர்)

இணைப்பாளர் : கலாநிதி சு.சிவரெத்தினம் (விழாக்குழுச்செயலாளர்)

தொகுப்பாளர் : திரு.செ.நவாகரன் (விழாக்குழு உறுப்பினர்)

### மங்கல விளக்கேற்றல் - முதன்மை அதிதிகள்



**திரு.க.கருணாகரன்**
(செயலாளர், வீதி அபிவிருத்தி, காணி,மகளிர் விவகார மனிதவளவிருத்தி அமைச்சு)



**திரு.கோ.மதிவண்ணன்**
(வீதிப் போக்குவரத்து ஆணையாளர், கொழும்பு)



**திரு.இரா.இராஜேஸ்வரன்**
(ஓய்வுநிலை சிறைச்சாலை ஆணையாளர்)

### மங்கல விளக்கேற்றல் - சிறப்பு அதிதிகள்



**சிவஸ்ரீ.பு.சடாட்சரசர்மா**



**செல்வி வயிரமுத்து விஜயலெட்சுமி**
(ஓய்வுநிலைப் பணிப்பாளர், தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம)



**திரு.நா.இதயகுமார்**
பொதுவைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, கல்முனை



**திரு.பெ.ரவிகூடி**
வண்ணக்கர், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்



**கலாபூஷணம் வி.வேலாயுதம்**
ஓய்வுநிலை அதிபரும், பிரபல சோதிடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவணக்கம்





### தமிழ்மொழி வாழ்த்து



**கலாநிதி. தெ. பிரதீபன்**

(இசைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்)

### கண்ணகி கலை இலக்கிய விழாக் கீதம்



**திருமதி.கௌசல்யா சஜிரூபன்**

(கலைமாணி – சங்கீதம்), ஆசிரியை, கன்னன்குடா மகா வித்தியாலயம்

### ஆசியுரை



**சிவஸ்ரீ பு.சடாட்சரசர்மா**

### வரவேற்பு நடனம்



**மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலய மாணவிகள்**

நெறியாள்கை – **திருமதி. மதி தேவகுமார்** (நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவேற்புப் பாடல்**



திரு. க. சண்முகநாதன்

**வரவேற்புரை**



திரு. கு. நாகேந்திரன்
(விழாக்குழுத் துணைத்தலைவர்)

**அரங்க அறிமுகம் - இணைப்பாளர்**



கலாநிதி.சு.சிவரெத்தினம்
(விழாக்குழுச் செயலாளர்)

**கண்ணகி கலை இலக்கிய விழாப்பட்டயம் வாசித்தல்**



திருமதி சுந்தரமதி வேதநாயகம்
(துணைச் செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

**தொடக்கவுரை**



செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)

**தலைமையுரை**



திரு.ப.குணசேகரன்
(விழாக்குழுத் தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.அ.அன்பழகன் குருஸ்**
(செயலாளர், கண்ணகி கலை இலக்கிய கூடல்)



**திரு.செ.நவாகரன்**
(விழாக்குழு உறுப்பினர்)

**தொடக்க விழா அமர்வு -1 இல் அவையோர்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கூடல்" (பரல் - 07) விழா மலர் 2018 வெளியீடு

வெளியீட்டுரை : கதிரவன் த.இன்பராசா (தொகுப்பாசிரியர்)

வெளியீடு : திரு.கா.இராமச்சந்திரன் (செயற்குழு உறுப்பினர், கண்ணகிகலை இலக்கியக்கூடல்)

அனுசரணை : களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்.




'கூடல்' (பரல் - 7) விழாமலர் 2018 வெளியீடு

வெளியீட்டுரை



கதிரவன் த.இன்பராசா

(தொகுப்பாசிரியர்)

முதற் பிரதி பெறுநர்



திரு.கா.வேலாயுதபிள்ளை

(வண்ணக்கர் / தலைவர், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்)

சிறப்புப் பிரதிகள் வழங்கல்



திரு.பெ.சிவசுந்தரம்

(அகில இலங்கை சமாதான நீதவான்)



சட்டத்தரணி பாடுமீன் சு.ஸ்ரீகந்தராசா

(அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கவுரை

## செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்

(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



உலக மயமாக்கத்தினாலும் - இயந்திர நாகரீகத்தாலும் - திறந்த பொருளாதாரத்தாலும் – தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியினாலும் - பல்தேசியக் கொம்பனிகளின் வணிகச் செயற்பாடுகளினாலும் - புலம்பெயர் தேசங்களிலிருந்து கொணர்ந்த பொருள் வீக்கத்தினாலும் - புதுப்புது மேற்குநாட்டுக் கலாசாரங்களாலும் கற்பழிந்து விடாமல் கன்னி அழகுடன் விளங்கும் கிழக்கிலங்கைக் கிராமங்களுள் 'களுதாவளை' யும் ஒன்றாகும். மருதமும் நெய்தலும் அணிசெய்யும் மற்றும் களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலயத்தால் பிரசித்தி பெற்றதுமான களுதாவளைக் கிராமத்திலே நடைபெறுகின்ற எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2018' இன் தொடக்கவிழா அரங்கான கூலவாணிகன் சாத்தனார் அரங்கிற்குத் தலைமை வகிக்கின்ற விழாக்குழுத்தலைவர் மதிப்பிற்குரிய ப.குணசேகரன் அவர்களே!

அரங்கை அணிசெய்கின்ற முதன்மை அதிதிகளே! சிறப்பு அதிதிகளே! அரங்க ஆற்றுகையாளர்களே! அவையில் நிறைந்திருக்கின்ற கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்களே! எழுத்தாளர் - கலைஞர்கள் - ஊடகவியலாளர்களே! விழாக் குழு உறுப்பினர்களே! ஊர் மக்களே! அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள்

திருமாமணி நங்கை வந்தாள் – எங்கள்

தேசந் தழைத்திட வந்தாள் – வந்தாள்

அவையிலே வீற்றிருக்கின்ற இருவரைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூற வேண்டியுள்ளது. ஒருவர் தமிழ்நாட்டிலேயிருந்து தன் துணைவியாரோடு வருகை தந்திருக்கின்ற பேராசிரியர் தி.சு.நடராசன் மற்றவர் அவுஸ்திரேலியாவிலிருந்து. தன்னைப் பெற்றெடுத்த தாயாரின் சுகயீனத்துக்கு மத்தியிலும் தனது தாய் மண்ணிலே நடைபெறுகின்ற விழாவினை நேரிலே தரிசிக்கவேண்டுமென்ற தணியாத தாகத்தோடு ஓடோடி வந்திருக்கின்ற எனது அன்பு கெழுமிய நண்பர் சட்டத்தரணி பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா அவர்கள்.

வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும் - விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் - வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும் - சாதிமதபேதமற்ற சமரச நோக்கையும் - சகோதரத்துவ உளப்பாங்கையும் உடைய கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி கலாசாரத்தைப் பேணி வளர்த்தெடுக்கும் வகையிலும் – அப்பண்பாட்டிற்கு அடிநாதமாக விளங்கும் கண்ணகி கலை இலக்கியங்களை மக்கள் மயப்படுத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாக்கும் வகையிலும் - கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகத்தை ஒரு குடும்பமாக ஒரு பண்பாட்டுத்தளத்தில் ஒன்றிணைத்து அதன் மூலம் அவர்களது சமூக, பொருளாதார, பண்பாடு, கல்வி, கலை, இலக்கிய, சூழல் பாதுகாப்பு மற்றும் ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவு பூர்வமாக ஆற்றுப்படுத்தும் வகையிலும் முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழா 2011 இல் மட்டக்களப்பு நகரிலும், தொடர்ந்து இரண்டாவது விழா 2012இல் மட்டக்களபபு மாவட்டம் புதுக்குடியிருப்பிலும், மூன்றாவது விழா 2013இல் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலும் நான்காவது விழா 2014இல் அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலிலும், ஐந்தாவது விழா 2015இல் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையிலும், ஆறாவது விழா 2016இல் மட்டக்களப்பு மாவட்டம் கன்னன்குடாவிலும், ஏழாவது 2017 இல் மட்டக்களப்பு மாவட்டம் கிரானிலும் ஆண்டுதோறும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வந்துள்ளது. இவ்விழாத் தொடரின் எட்டாவது விழா மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளையிலே கால் பதித்துள்ளது.

கண்ணகி கலை இலக்கியக் கூடல் 2011இல் ஆரம்பித்து வைத்த இவ்விழாத் தொடர்ப் பயணம் தொலைநோக்குடையது. தூய்மையான இலக்கினையுடையது. சமூக நோக்கமுடையது. இப்பயணம் நீண்ட நெடும் பயணமாகும். கலை இலக்கியங்களினூடாக மானுடத்தை ஓங்கச் செய்வதே இவ்விழாக்களின் உயிர் நாடியாகும். பாரம்பரிய கலைவடிவங்களைப் பேணுவதும் அருகிவரும் கலை இலக்கிய வடிவங்களை அழிந்து விடாமல் மீளுருவாக்கம் செய்வதும் கண்ணகி கலை இலக்கியக் கூடல் ஏற்றுக் கொண்டுள்ள பணிகளுள் சிலவாகும். அந்தவகையிலே சென்றவருடம் கிரானிலே நடைபெற்ற விழாவிலே 'கண்ணகி வழக்குரை' காவியத்தை மீள்பதிப்புச் செய்தோம். இந்த விழாவிலே 'வசந்தன் கவித்திரட்டு' நூல் மீள்பதிப்பு வெளியிடப்படவுள்ளது.

நேற்று தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலய முன்றலில் 'கவுந்தியடிகள்' அரங்கிலே கொம்புமுறிவிழா நடைபெற்றது. சுமார் நூறுவருடங்களுக்குப் பிறகு இவ்விழா நடைபெற்றதாக ஊர்ப் பெரியவர்கள் உரைக்கக் கேட்டோம். அவ்விழாவைச் சிறப்பாக நடாத்திவைத்த ஏற்பாட்டுக் குழுவினருக்கு கண்ணகி கலை இலக்கியக் கூடலின் சார்பில் எனது பாராட்டுக்களும் நன்றிகளும்.

மேலும், இவ்விழாவை இத்துணைக் கச்சிதமாக்க கட்டமைத்த நண்பர் ப. குணசேகரன் தலைமையிலான விழாக் குழுவினர்களுக்கும் எனது விசேட பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக. இதற்கு ஒத்துழைத்த ஊர் மக்களுக்கும் அவை உரித்தாகட்டும்.

அன்பானவர்களே! வாருங்கள் !!

- கலை இலக்கியங்களினூடாகச் சமூக மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துவோம்.
- கலை, இலக்கியங்களினூடாக மனித மனங்களைச் செழுமைப்படுத்தி மனித உறவுகளையும் மனித விழுமியங்களையும் கட்டியெழுப்புவோம்.
- கலை இலக்கியங்களினூடாகப் பொருளாதார வளங்களை மேம்படுத்துவோம்.
- கலை இலக்கியங்களினூடாக இயற்கை அனர்த்தங்களினாலும் யுத்தக் கொடுமைகளாலும் வாழ்வியல் துன்பங்களினாலும் நொந்து போய் உள்ள மனித மனங்களை ஆசுவாசப்படுத்துவோம்.
- கலை இலக்கியங்களினூடாகப் பண்பாட்டுத்தளமொன்றில் ஒன்றிணைவோம்.
- கலை இலக்கியங்களினூடாக அறிவார்ந்த சமூகமொன்றை நிர்மாணம் செய்வோம்.

நன்றி! வணக்கம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமையுரை

**ப.குணசேகரன்** *(விழாக்குழுத் தலைவர் – 2018, களுதாவளை)*



அனைவருக்கும் வணக்கம்.

வருவோரை வரவேற்று வாழவைக்கும் கிழக்கிலங்கை கண்ணகி வழிபாட்டில் பெயர்பெற்ற பிரதேமென்பது யாவரும் அறிந்த விடயமாகும். கண்ணகிக்குச் சடங்கு நடைபெறும் காலம் இப்பிரதேச மக்களுக்கு மிகவும் எழுச்சி மிகுந்த காலமாகும்ணய தெய்வங்களின் வழிபாடுகளுக்கும் ஒரு Ling மேல் கிராமங்களில் புனிதத்தன்மை பேணப்படுவதுடன் இக்காலங்களில் மா இடித்தல், அம்மியில் அரைத்தல், எண்ணெய்யில் பொரித்தல் போன்ற பல அன்றாட காரியங்கள் தவிர்க்கப்படும் வழக்கமும் மாதவிலக்கான மாதர்கள் பிரதேசத்தை விட்டு விலகியிருக்கும் வழக்கமும் இன்றும் கிராமங்களில் கடைப்பிடிக்கப்பெற்று வருவதை நாம் காணலாம் பெண்கள் வீட்டுக்கு வீடு சென்று மடிப்பிச்சை ஏந்தி கண்ணகித் தாயாருக்கு காணிக்கையாக்குவதும் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

ஆறுமுகநாவலரின் காலத்தில் கண்ணகிகளெல்லாம் இராஜராஜேஸ்வரிகளாக மாற்றப்பட்டுவிட்ட போதிலும்கூட இன்னும் வட இலங்கையில் பிரபல்யமான பல கண்ணகி வழிபாட்டுத்தலங்கள் அருள் பாலித்துக் கொண்டிருப்பதையும் அங்கே கடல் நீரில் விளக்கெரிக்கும் அற்புதமான காரியங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். சகோதர சிங்கள் மக்களிடம்கூட எமது கண்ணகி பத்தினித் தெய்வமாக மிளிர்கின்றாள்.

கண்ணகி வழிபாட்டுச் சடங்கு முறைகளோடு மட்டும் நின்றுவிடாமல் கண்ணகி இலக்கியத்தில் பொதிந்து கிடக்கின்ற தொன்மங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்து கையளித்துச் செல்லவேண்டியதன் அவசியம் உணரப்பெற்று அதனை நிறைவேற்றும் நோக்குடனேயே 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பில் 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' தோற்றம் பெற்றது. அன்றிலிருந்து ஆண்டுதோறும் இவ்வாறான விழாக்கள் தவறாது இடம்பெற்று வருவது கண்ணகித் தாயாரின் அருளினாலேதான் என்று துணிந்த கூறமுடியும்.

மட்டக்களப்பு நகரில் தொடங்கி புதுக்குடியிருப்பு, ஆலையடிவேம்பு (அக்கரைப்பற்று), தம்பிலுவில், வந்தாறுமூலை, கன்னன்குடா, கிரான் என்று ஏழு இடங்களில் வெற்றி நடைபோட்டு எட்டாவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச மக்களினதும் கிரான்குளம் கிராம மக்களினதும் பெரு விழாவாக இவ் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதில் தம்பிலுவில் தவிர்ந்த ஆறு இடங்களிலும் இரண்டு நாட்கள் விழாவாகவும் தம்பிலுவிலில் போர்த்தேங்காய் உடைத்தல். கொம்புமுறி நிகழ்வுகள் ஒருநாளும் சேர்ந்து மூன்று நாட்கள் விழாவாகவும் இடம்பெற்றிருந்தன. இவ் அனைத்து விழாக்களிலும் முழுமையாகப் பங்குபெறும் பேறு கிடைக்கப்பெற்றவர்களில் நானும் ஒருவன். இவ்விழாவானது எதிர்பாராத விதமாக ஏழு விழாக்களுக்கும் மேல் ஒருபடி சென்று நான்குநாள்கள் விழாவாகச் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். நேற்றைக்கு முன்தினம் போர்த்தேங்காய் உடைக்கும் நிகழ்வும் நேற்று கொம்பு முறி நிகழ்வும் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் முதலைக்குடா பாலையடி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் பட்டிப்பளைப் பிரதேச மக்களின் ஆலோசனைகளுடனும் பங்குபற்றுதலுடனும் மிகவும் கோலாகலமாக நடந்தேறின. ஏனைய நிகழ்வுகள் இன்றும் நாளையும் களுதாவளை கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடந்தேற இருக்கின்றன. முதல் இருநாள் நிகழ்வுகளையும் நடாத்தி முடிப்பதற்குத் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலய தலைவர் தம்பி த. விமலானந்தராஜாவும், இணைப்பாளரும் எாது விழாக்குழுவின் உபதலைவர்களில் ஒருவருமான சோ கணபதிப்பிள்ளை அவர்களும் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்டிருந்தார்கள். அவர்களுக்குத் தேற்றாத்தீவு ஆலய நிருவாகிகளும் கிராம பொதுமக்களும் நிறைந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். இங்கு இன்றும் நாளையும் நடைபெறவிருக்கும் விழாக்களுக்கு மண்முனை தென் எருவில் பிரதேச கிராம மக்களும் கிரான்குளம் கிராம மக்களும் இப்பிரதேசங்களில் உள்ள கண்ணகி அம்மன ஆலயங்களின் பரிபாலன சபையினரும் நிறைந்த ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக பரிபாலன சபையினர், திருநீற்றுக் கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையினர். திருஞானசம்பந்தர் குருகுலத்தினர். களுதாவளையில் செயல்படும் மன்றங்கள், சங்கங்கள். பொது அமைப்புக்கள், பொதுமக்கள் அனைவரும் அனுசரணைகளையும் பங்களிப்புகளையும் ஒத்துழைப்புகளையும் மிகவும் தாராளமாகவே வழங்கியிருக்கின்றார்கள் இவ்வாறான ஒத்துழைப்புகளின் காரணமாகவே இன்று நாம் இரு பெரும் பண்பாட்டுப் பவனிகளையும் சிறப்பாக நடாத்த முடிந்தது. பாடசாலை மட்டங்களிலும் திறந்த மட்டத்திலும் போட்டிகளை நடத்தி இருக்கின்றோம். அவர்களுக்கான கலை இலக்கிய, பரிசுகளும் சான்றிதழ்களும் கூடல் மலர். வசந்தன் கவித்திரட்டு. வழங்கப்படவிருக்கின்றன. ஒலிச்சித்திரப்பேழை போன்றவை வெளியிடப்படவிருக்கின்றன. நூலங்காடி, ஓவியக்கண்காட்சி. ஆய்வரங்கு. பட்டிமன்றம், சிறப்புச்சொற்பொழிவுகள், வசந்தன்கூத்து, கண்களைக்கவரும் நடனங்கள். இனிய பாடல்கள் என்பனவும் அரங்கேறக் காத்திருக்கின்றன. தொல்லியல் துறையில் சிறப்பான ஆய்வு நூல்களை வெளியிட்டு பெருமைசேர்த்துக்கொண்டிருக்கும் ஓய்வுநிலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி க.தங்கேஸ்வரி அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது. மொத்தத்தில் இது ஒரு முத்தமிழ் விழாவாக ஜொலித்துக்கொண்டிருக்கின்றது. இத்தகைய சிறப்புமிகு விழா ஒன்றிற்குத் தலைமைதாங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது சுயம்புலிங்கப் பெருமானினதும் கண்ணகித் தாயாரினதும் சித்தம் என்று நான் கருதுகின்றேன்.

இவ்விழா சிறப்புற நடந்தேறுவதற்கு என்னுடன் ஒத்துழைத்த பொதுமக்கள். விழாக்குழு நிருவாகிகள்,உபகுழு உறுப்பினர்கள், ஆலோசகர்கள். கண்ணகி கலை இலக்கிய கூடல் தாய்ச்சங்க தலைவர், செயலாளர் உட்பட அனைத்து உறுப்பினர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எனது வலது கரமாகவும் இடதுகரமாகவும் செயற்திறன் கொண்டுழைத்த விழாக்குழச் செயலாளர் கலாநிதி சு.சிவரெத்தினம், பொருளாளர் தம்பி. மு. ஜீவன் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் மேலும் இவர்கள் அனைவருக்கும் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரினதும் கண்ணகித் தாயாரினதும் அருள் என்றும் கிடைக்கவேண்டும் என்றும் பிரார்த்தித்து வாய்ப்புக்கு நன்றி கூறி எனது தலைமையுரையினை நிறைவுசெய்கின்றேன். நன்றி. வணக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் அறிக்கை

**அ.அன்பழகன் குரூஸ்**

(செயலாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



**எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா:**

மண்முனை தென்எருவில்பற்று பிரதேசம், களுதாவளையில் புதிய அத்தியாயம் 2018

கூடல் அமைப்பின் முயற்சி, கூடல் தாய்ச் சங்க உறுப்பினர் திரு.ப.குணசேகரன் அவர்களின் தலைமை, மற்றும் களுதாவளை மக்களின் தன்னலமற்ற ஒத்துழைப்புடன் ஆகிய வலுவான காரணிகள் ஒன்றிணைந்து 2018 ஆம் ஆண்டு எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழாவை ஒரு புதிய அத்தியாயமாக இன்று தொடக்கிவைக்கிறது.

கண்ணகி கலை இலக்கியங்களை மக்களிடம் கொண்டு சென்று பரவலாக்குவதை நோக்கமாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டில் 'கூடல்' அமைப்பு ஆரம்பிக்கப்பெற்றது. 2011 முதல் ஏழு கண்ணகி கலை இலக்கிய விழாக்களை மிக விமரிசையாக நடாத்தி, அதன் தொடர்ச்சியாக, எட்டாவது விழா மண்முனைத் தென் எருவில் பற்று பிரதேசத்தில் நடாத்துவது எனத் தீர்மானித்தபோது, இப்பகுதி மக்களின் பேராதரவு இதனை சாத்தியப்படுத்திற்று.

**விழா ஏற்பாடுகளும் ஒருங்கிணைப்பும்.**

2018 ஆம் ஆண்டு எட்டாவது விழாவை மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தில் களுதாவளையில் நடத்தலாம் என்று கூடல் அமைப்பின் மூத்த உறுப்பினர் திரு.ப.குணசேகரன் முன்வைத்த யோசனை, அப்பகுதி மக்களின் ஆதரவுடன் விரைவாகச் செயல்வடிவம் பெற்றுள்ளது.

களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற முதல் ஆலோசனைக் கூட்டத்தில், மண்முனைத் தென் எருவில் பற்று பிரதேச கலை இலக்கிய ஆர்வலர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, விழாவை நடத்த முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கினர். இதன் விளைவாக, திரு.ப.குணசேகரன் அவர்களைத் தலைவராகவும், கலாநிதி சு. சிவரெத்தினம் அவர்களைச் செயலாளராகவும், திரு.மு.ஜீவன் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட 46 உறுப்பினர்களுடன் விழாக்குழு அமைக்கப்பெற்றது. இக்குழுவின் அயராத உழைப்பும், மண்முனைத் தென் எருவில் பற்று பிரதேச மக்களின் நிதியுதவி மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்பும் இந்த விழாவை வெற்றிகரமாக நடத்த வழிவகுத்திருக்கின்றன.

'கூடல்' விழாமலர் பரல் -07 அச்சிட களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரின் முழுமையான அனுசரணையும், அதுமட்டுமன்றி கலாசார மண்டபத்தினையும் வழங்கி இந்த விழாவிற்கு பெரும் ஆதரவு நல்கியமை குறிப்பிடத்தக்கன. அவ்வாறே மேலும் பலரது அனுசரணைகளும் ஒத்துழைப்புக்களும் கிடைத்தமை விழாவை இலகுவாக நடாத்த பேராதரவாக அமையலானது.

மூன்று நாள் விழா: முதல் நாள் நிகழ்வுகள்

2018 செப்டம்பர் 7ஆம் திகதி முதல்நாள் தேற்றாத்தீவில் கொம்புமுறி விளையாட்டும், 2018 செப்டம்பர் 8, 9ஆம் திகதிகளில் இரண்டாம் மூன்றாம் நாள் நிகழ்வுகள் களுதாவளை கலாசார மண்டபத்திலும் சிறப்பாக நடைபெறவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்றன.

முதல் நாளான நேற்று செப்டம்பர் 7 ஆம் திகதி தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் கொம்பு முறி விளையாட்டு கோலாகலமாக நடந்து முடிந்துள்ளது. கொம்புச்சந்தி மைதானத்தில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடந்த இந்த நிகழ்வு இப்பகுதி மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளதுடன் பழமையை மீட்டுப்பார்க்கவும் வைத்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற போர்த்தேங்காய் அடித்தல் நிகழ்வையும் சேர்த்துப்பார்த்தால் மூன்றுநாள் விழா நான்கு நாள்களாகியுள்ளது.

இன்று செப்டம்பர் 8ஆம் திகதி காலை, தெற்கே களுவாஞ்சிகுடி கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருந்தும், வடக்கே செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருந்தும் புறப்பட்ட பண்பாட்டுப் பவனி, மக்களை ஒன்றிணைக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

இன்றைய நிகழ்வான தொடக்க விழாவில், விழாக்குழுத் தலைவர் திரு.ப.குணசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 'கூலவாணிகன் சாத்தனார்' அரங்கில் வழமைபோல் கண்ணகி கலை இலக்கிய விழாப் பட்டயம் வாசிக்கப்பெற்றது. தொடர்ந்து 'கூடல்' பரல் - 7 வெளியீடும், வேறு பல நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

அடுத்து வரும், 'சதாசிவஐயர் அரங்கிலே' நடைபெறவிருக்கும் இரண்டாவது அமர்வில் கலாநிதி சி.சிவரெத்தினத்தின் முயற்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்வியதிகாரி (அமரர்) சதாசிவ ஐயர் 1940 ஆம் ஆண்டு தொகுத்து வெளியிட்ட 'வசந்தன் கவித்திரட்டு' எனும் தலைப்பில் 62 பாடல்களை உள்ளடக்கிய நூலுடன் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் தொகுக்கப்பெற்ற கண்ணகி அம்மன் ஆலய வரலாறு எனும் நூலின் பின்னிணைப்பாக உள்ள பாடல்களையும் சேர்த்த 'வசந்தன் கவித்திரட்டு' (மீள்பதிப்பு) வெளியிடப்பெறவுள்ளது. தொடர்ந்து பரிசளிப்புகள், அதிதிகள் உரை மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறவுள்ளன.

இவை தவிர இன்று களுதாவளை மகா வித்தியாலயத்தில் ஓவியக் கண்காட்சியும், நூலங்காடியும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளன. இன்றைய தினம் பிற்பகல், 'கதிரவன் பட்டிமன்றப் பேரவையின்' பட்டிமன்றமும், கவிஞர் அண்ணாதாசன் துரைராஜசிங்கம் தலைமையில் கவியரங்கமும் நடைபெறவுள்ளன. இவ்வாறு, முதல் நாள் தொடக்க விழாவும், இயல் அரங்கமும் சிறப்பாக நிறைவுபெறும்

### இரண்டாவது நாள் காலை: ஆய்வரங்கு, விவாதம், மற்றும் விருதுவழங்கல்.

நாளை செப்டம்பர் 9ஆம் திகதி காலை, முதலாவது அமர்வான 'இளங்கோவடிகள் அரங்கிலே' ஆய்வரங்கு நடைபெறவுள்ளது. 'கிழக்கிலங்கைப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள்' என்ற தலைப்பில் நான்கு ஆய்வாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த ஆய்வரங்கு, பார்வையாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஒரு பெருவிருந்தாக அமையும்.

இரண்டாவது அமர்வாக, 'புலவர்மணி பெரியதம்பிபிள்ளை அரங்கு' நடைபெறவுள்ளது. இந்த அரங்கில், பாடசாலை மாணவர்களுக்கிடையே விவாதப் போட்டி நடைபெறும். மேலும், கலை இலக்கியம், பண்பாடு மற்றும் ஆய்வுப் பணிகளுக்கான கண்ணகி கலையிலக்கியக் கூடலின் 'விபுலானந்த விருது' முதன்முதலாக இம்முறை செல்வி க.தங்கேஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பெறவுள்ளது.

### மாலை அமர்வு – கலையரங்கும் நிறைவு விழாவும்

கண்ணகி கலை இலக்கிய விழாவின் இறுதி நாளான நாளை செப்டம்பர் 9ஆம் திகதி மாலை, 'மாதவி அரங்கில்' கலையரங்கும், நிறைவு விழாவும் நடைபெறும். குளுத்திப் பாடல்கள், கரகாட்டம், கண்ணகி வசந்தன், மீன்மகள் பாடுகிறாள் நடனம், தமிழிசை யாத்திரை போன்ற கலை நிகழ்ச்சிகள்மூலம் கண்ணகி கலை இலக்கியங்களைச் சார்ந்த பன்முகக் கலைகள் அளிக்கை செயப்பெறவுள்ளன.

### நிறைவாக,

இந்த விழா, கூடல் அமைப்பின் உறுப்பினர்களின் ஈடுபாட்டையும், களுதாவளை மக்களின் அசைக்க முடியாதநம்பிக்கையையும், பேராதரவையும் வெளிப்படுத்தியுள்ளது. சிறப்பாகநடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த விழா, கண்ணகி கலை இலக்கியங்களின் பாரம்பரியத்தைப் போற்றி, காலத்தால் அழியாத ஒரு பதிவை ஏற்படுத்தும். அதற்காக முன்னின்று உழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் மனம் நிறைவான நன்றிகளும் பாராட்டுகளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை அமர்வு - II (மு.ப 11.15 - 1.40)

## "சதாசிவ ஐயர் அரங்கு"

தலைமை : திரு.பெ.புவனசுந்தரம் (விழாக்குழு உறுப்பினர்)

இணைப்பாளர் : திரு.சா.துவாரகன் (விழாக்குழு உறுப்பினர்)

தொகுப்பாளர் : திரு.இ.அருள்ராஜ் (விழாக்குழு உறுப்பினர்)

தலைமையுரை





தொடக்கவிழா அமர்வு -II இல் அவையோர்

## நூல் வெளியீடு

நூல் : 'வசந்தன் கவித்திரட்டு' (மீள் பதிப்பு)

வெளியீட்டுரை : கலாநிதி சு.சிவரெத்தினம்

வெளியீடு : திருமதி வேதநாயகி குணநாயகம் (விழாக்குழு உறுப்பினர்)

முதற்பிரதி பெறுநர் : திரு.மு.இளைஞன்



வெளியீட்டுரை



கலாநிதி சு.சிவரெத்தினம்

சிறப்புப் பிரதி வழங்கல்



திரு.பா.கௌதமன்
தலைவர், செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயம்)



பேராசிரியர் தி.சு.நடராசன்
(தமிழ்நாடு, இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வசந்தன் கவித்திரட்டு [ மீள்பதிப்பு ]

# வெளியீட்டுரை


## கலாநிதி சு.சிவரெத்தினம்

*(மீள் பதிப்புக்குழு உறுப்பினர்)*


கண்ணகி கலை இலக்கியக் கூடல் 2017ஆம் ஆண்டு கண்ணகி கலை இலக்கிய விழாவில் கண்ணகி வழக்குரை' யினை மீள் பதிப்புச் செய்து வெளியிட்டு இருந்தது. அதன் தொடர்ச்சியாக 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' எனும் நூலினை 2018ம் ஆண்டுக்கான கண்ணகி கலை இலக்கிய விழாவில் மீள்பதிப்புச் செய்து வெளியிட வேண்டும் என்ற கருத்தினை மு.சதாகரன், கலாசார உத்தியோகத்தர், அவர்கள் கண்ணகி கலை இலக்கிய விழா 2018க்கான ஆரம்பக் கூட்டத்தில் முன்வைத்தார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' மீள் பதிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சதாசிவஐயர் 1940ம் ஆண்டு மட்டக்களப்பில் பாடப்படும் வசந்தன் பாடல்களைத் தேடித் தொகுத்து 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' எனும் நூலாக வெளிக்கொண்டு வந்திருந்தார். இன்று இந்நூல் மட்டக்களப்பில் ஒருசிலரிடம் மாத்திரமே உள்ளது. இதனை மீள்பதிப்புச் செய்து வெளியிடுவதினூடாக கண்ணகி கலை இலக்கியக் கூடலும் இவ்வாண்டுக்கான கண்ணகி கலை இலக்கிய விழாக் குழுவினரும் மட்டக்களப்பின் இலக்கிய பாரம்பரியத்தக்கும் அதன் அரங்கியல் பாரம்பரியத்துக்கும் குறிப்பிடத்தக்க பணியைச் செய்துள்ளார்கள் என நினைக்கின்றேன்.

75 வருடங்களுக்கு முன்பு தொகுத்து வெளியிடப்பட்ட 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' எனும் நூலில் அடங்கியுள்ள பாடல்களைப் பார்த்தபோது அதில் உள்ளடங்காது பல பாடல்கள் மட்டக்களப்பில் வழக்கிலுள்ளதை அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. அந்தவகையில் 'செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய வரலாறு' எனும் நூலில் உள்ள வசந்தன் பாடல்கள் மேற்படி சதாசிவஐயருடைய தொகுப்பில் இல்லை. இதனால் அந்நூலில் உள்ள பாடல்களை இவ் மீள்பதிப்பில் பின்னிணைப்பாக சேர்த்துள்ளோம் என்பதையும் அறியத் தருகின்றேன்

இவ் மீள் பதிப்பினை, கண்ணகி கலை இலக்கிய விழா 2018 இல் வெளியிட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணத்தினால் மட்டக்களப்பு முழுவதும் தொடர்ச்சியான தேடல்களை மேற்கொண்டு ஒரு முழுமையான வசந்தன் கவித்திரட்டினை வெளியிட முடியவில்லை என்கின்ற எங்கள் மனக் குறையினையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்கால ஆய்வாளர்கள் இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு முழுமையான வசந்தன் கவித் திரட்டினை வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, இந்த நூலினை மீள்பதிப்புச் செய்வதற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றபோது திரு.மு.இளைஞன், எருவில் அவர்கள் தமது சகோதரர்கள் நினைவாக மீள்பதிப்புக்கான செலவினை ஏற்றுக்கொண்டு கண்ணகி கலை இலக்கிய விழாக்குழுவினருக்கு பெரிதும் உதவி புரிந்தார். அவரை இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அதேபோல் இந்நூலின் மூலப்பிரதியினைத் தந்துதவியதோடு ஒரு காத்திரமான முன்னுரையினையும் வழங்கியமையினையிட்டு பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், இவ்மீள்பதிப்பு வெளிவரவேண்டும் என்ற ஆவலுடனும் அக்கறையுடனும் எம்முடன் தொடர்ச்சியாகப் பலர் உழைத்துள்ளனர் அவர்கள் அனைவருக்கும் விழாக்குழுவின் சார்பில் நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கல்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முதன்மை அதிதி உரை

**திரு.க.கருணாகரன்**

(செயலாளர், விதி அபிவிருத்தி, காணி, மகளிர் விவகார
மனிதவலுவிருத்தி அமைச்சு, கி.மா)



சிறப்பு அதிதி உரை

**திருமதி.சிவப்பிரியா வில்வரத்னம்**

பிரதேச செயலாளர், மண்முனை தென் எருவில் பற்று,
களுவாஞ்சிகுடி

சிறப்பு அதிதி உரை

**திரு.கா.வேலாயுதபிள்ளை**

வண்ணக்கர்/ தலைவர், களுதாவளை
சுயம்பு லிங்கப்பிள்ளையார் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரண ஒளிப்படக் காட்சி கண்ணகி கலை இலக்கிய விழா - 2017

### கிரான் (ஏழாவது கண்ணகி கலை இலக்கிய விழா)

**இணைப்பாளர்** : திரு.ச.மதன் (ஆவணவாக்கப் பொறுப்பாளர், கண்ணகி கலை இலக்கிய கூடல்)

**அறிமுகவுரை** : திரு.து.நகுலேஸ்வரன் (விழாக்குழுச் செயலாளர் - 2017, கிரான்)

**ஆரம்பித்து வைப்பவர்** : திரு.மு.மகேந்திரராசா ( விழாக்குழுத் துணை தலைவர் - 2017, கிரான் / விழாக்குழுப் பொருளாளர் - 2015, வந்தாறுமூலை )





நன்றியுரை
**திரு.சி.லவக்குமார்**
நிகழ்ச்சித் தொகுப்பு (விழாக்குழுத் துணைச்செயலாளர்)



நிகழ்ச்சித் தொகுப்பு
**திரு.து.நகுலேஸ்வரன்**
(கண்ணகி கலை இலக்கியக்கூடல் உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஓவியக் கண்காட்சி











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாவில்போது...

இடமிருந்து வலமாக ப.குணசேகரன் (விழாக்குழுத் தலைவர், களுதாவளை), மா.வேதநாயகம் (கண்ணகி கலை இலக்கியக்கூடல் உறுப்பினர்), செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் (தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்), பேராசிரியர் தி.சு.நடராசன் (தமிழ்நாடு, இந்தியா), கதிரவன் த.இன்பராசா ( 'கூடல்' தொகுப்பாரிரியர் ), அ.அன்பழகன் குரூஸ் (செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 செப்டெம்பர் 2018, சனிக்கிழமை - மாலை

## இயல் அரங்கு (பி.ப 3.00 - மாலை 7.00)

தலைமை : கலாபுஷணம் ஆ. அரசரெத்தினம் (விழாக்குழு ஆலோசகர்)
இணைப்பாளர் : திரு. மு. ஜீவன் (விழாக்குழு பொருளாளர்)
தொகுப்பாளர் : திரு. த. சர்ஜின் (விழாக்குழு உறுப்பினர்)

### மங்கல விளக்கேற்றல்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மட்/பட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவிகள்**

நெறியாள்கை – செல்வி **ஜெயாநந்தினி இராசரெத்தினம்** (நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பட்டிமன்றம் : மட்டக்களப்பு கதிரவன் பட்டிமன்றம்
நெறியாள்கை : கதிரவன். த. இன்பராசா
தலைப்பு : சிலப்பதிகாரம் கூறும் அறவழியில் வாழுகிறோம்! / வாழவில்லை!

## வாதிட்டோர்

### வாழுகிறோம்!



கவிஞர் ஜீ.எழில்வண்ணன்



மட்டுநகர் சிவ.வரதகரன்



செல்வி நர்மதா கருணாகரன்

### வாழவில்லை!



அ.அன்பழகன் குரூஸ்



பாலமீன்மடு இரா.கலைவேந்தன்



திருமதி நிலோஜினி குணசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “கண்ணகி எனும் தொன்மம்”

## சிறப்புச் சொற்பொழிவு

**பேராசிரியர் தி.சு.நடராசன்** (தமிழ்நாடு, இந்தியா)

சிலப்பதிகாரம், தமிழ்ப் பண்பாட்டு மீட்டுருவமாக எழுந்த காப்பியம். அப்படிக் கொள்வோமானால் அந்த மீட்டுருவாக்கம் எதிலிருந்து எழுகிறது? எப்படியாக அது ஆக்கப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டுவது அவசியம். காலவெளியில் இறுகிக்கிடக்கும் தொன்மங்கள் (Myths) அல்லது தொல்படிமங்கள், (Arche) சமகாலத்து நிகழ்வுகள், வருங்காலத்துக் கதைகள் என்று கட்டமைக்கப்பட்ட சிந்தனை வெளிகளின் ஒன்றிணைவாக இந்த மீட்டுருவாக்கம் அமைகிறது. பழைமையின் உயிர்ப்பிலிருந்து வரும் தனக்கு உகந்த, பொருத்தமெனக் கருதுகின்ற அல்லது தவிர்க்கமுடியாதனவாக ஆகிக்கிடக்கின்ற பண்பாட்டுச் சாரங்கள், சில ஆளுமைகள் வாயிலாகவும், சில கருத்துக்கள் வாயிலாகவும், சில செய்திகள் அல்லது குறிப்புகள் மூலமாகவும் வெளிப்படுகின்றன. இவை, கலை இலக்கிய வெளியில் அல்லது ஒரு காப்பியத்தில் ஒட்டுமொத்தமாக வெளிப்பட்டு நிற்பதில்லை. ஏனெனில், எந்த இலக்கியமும் அல்லது கருத்து வடிவமும் பன்மைத்துவம் கொண்டதாகவே வளர்கிறது. அதன்போது, அது சூழலமைவுகளுக்கேற்ப ஏற்புடைமை வேண்டித் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. எனவே, ஒரு கலைவடிவத்துள் ஒன்றிணையக் கூடிய சாத்தியங்களுடன் அது பல அளவையில் சிதறுண்டு கிடக்கலாம். உறவு கொண்டிருக்கலாம். இத்தகையவற்றைத் தொகுத்தும் இணைத்தும் காணுகிறபோது மீட்டுருவாக்கமாக எழுகிற செய்திகளையும் அவற்றின் எடுத்துரைப்புக்களையும் நாம் இனங்கண்டு கொள்ளலாம்.

நீண்ட காலமாகக் கலை இலக்கியப் பகிர்வுகளில் மற்றும் சிந்தனை வடிவங்களில், மனித சமூகத்தின் நினைவுகளாகப் - படிமங்களாகக் - குறியீடுகளாக அல்லது மரபுத் தொடர்களாக, உயிர்ப்புடனும் மீண்டும் புதுப்பிக்க முடியும் என்ற சாத்தியங்களுடனும் எடுத்துரைப்புக்களின் பகுதிகள் ஒன்றும் பலவுமாக நிலைகொண்டு விடுகின்றன. கலை இலக்கியங்களில் ஏற்புடைய இடம் தேடிப் புரிதிறன்களோடு இவை கலந்து கிடக்கின்றன. இவற்றையே தொன்மங்கள் என்று பொதுவாக, நாம் அழைக்கின்றோம். தொன்மங்கள், வளர்ச்சிபெற்ற நாகரிகங்கள் ஒரு பண்பு. தொன்மம் பற்றிய ஆராய்ச்சியில் தொல்மானிடவியல், சமூகவியல், பின்னை அமைப்பியல், உளவியல், நாட்டுப்புறவியல் முதலிய பலதுறைகள் தொடர்புபட்டுகிடக்கின்றன.

விக்கோ, ஷெல்லிங், நார்த்ரோப்ஃஃபிரய், குஸ்தவ்யுங், லெவிஸ்ட்ரோஸ், ரோலந் பார்த் முதலிய பல அறிஞர்கள் இதில் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்களின் வரையறைகள் பல, இவற்றைத் தொகுத்தும் சுருக்கியும் நாம் இப்படிக் கூறலாம்: ஒரு சமூக - பண்பாட்டின் இலக்குகள், ஆசைகள், பயங்கள் முதலியவற்றின் வெளிப்பாடுகளாக தொல்படிமங்கள் அமைகின்றன. இவை பெரும்பாலும், கடவுளர்கள், கடவுளின் மாதிரிகள், பேராளுமைகள், சமூகத்தின் போராளிகள் முதலியவர்கள் பற்றிச் சொல்லுவதில் அக்கறை காட்டுகின்ற, மரபுவழிபட்ட வடிவங்கள் இத்தகைய தொன்மங்கள் மூலமாகச் சமய வழிப்பட்ட அனுபவங்களையும், அவற்றின் மேன்மைகளையும் வளர்த்து வரும் பண்பாடு உணர்த்துகிறது. மேலும், இத்தொன்மங்கள், மனித நடத்தைகளின் வகை மாதிரிகளை உருவாக்குகின்றன அல்லது அறியப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகஇந்திய நாட்டில் வழங்கும் தொன்மங்கள் தனிமனித நிலையிலும் சமூகநிலையிலும் அழுந்திக் கிடக்கும் சோகங்களையும், குழப்பங்களையும், நெருக்கடிகளையும் இறுதியில் அவற்றிலிருந்து விடுபட்டு மீள்வதையும் சொல்லுகின்றன. மேலும் மனிதன் எவ்வாறு தனக்கு ஏற்படும் மோதல்களையும், பெரும் வேற்றுமைகளையும் தவிர்த்து அல்லது அவற்றை மீறி வாழ வேண்டியவனாகிறான் என்பதையும் அவை குறிப்பறிவித்துப் பேசுகின்றன. தனி மனித-சமூக விழுமியங்களின் நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் அவன் எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதையும் தொன்மங்கள் உணர்த்துகின்றன. (Geroge Williams, Handbook of Indian Epic, (O.U.P) 1980.)

சிலப்பதிகாரம், தமிழ்ப்பண்பாட்டு மீள்ருவாக்கமாக எழுந்த ஒரு எடுத்துரைப்பு என்று கொள்ளப் படுமானால், அது முக்கியமாகக் கண்ணகி எனும் பேராளுமையை மையமிட்டு அமைந்துள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். கண்ணகி எனும் ஆளுமை, ஒரு தொன்மம் என்றால், அது எவ்வாறு உருவாகி வளர்ந்து வந்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். முதலில், சிலம்பு சித்திரிக்கின்ற கண்ணகி, கற்பு என்று அறியப்படுகின்ற ஒரு சமூக விழுமியத்தின் செய்தி. அந்தக் கற்பு, வம்புக்கு இழுக்கப்படுகிறது அதனுடைய செயல்பாடும் அதன் பொருளும் நெருக்கடிகளாகின்றன. அவளை அவலம் பிடித்துக் கொள்ள அவளுடைய பண்பும் பண்பின் செயலும் சமூகச் செய்தியாக ஆகி, அரசியல் நிகழ்வாகவும் பண்பாட்டு அடையாளமாகவும் வளர்கிறது. கண்ணகியின் அவலம், என்பது குற்றம் எதுவும் இழைக்காமல், வலிய தனது குடும்ப வாழ்க்கையின் இன்பத்தையிழக்கிற நிலைக்குத் துரத்தப்படுகிறாள் என்பது, ஆனால், அந்த அவலத்தினிடையே அவள் அழிந்து போகவில்லை. எழுந்து நிற்கிறாள். ஒரு தெய்வமாக உயர்ந்து நிற்கிறாள். அப்படி ஒரு படிமம் உருவாக்கப்படுகிறது. அந்தப் படிமம் எங்கிருந்து வருகிறது? அன்றையக் கலாச்சாரத்தின் அடித்தளத்திலே புதைந்து கிடக்கும் தொன்மங்களின் சாராம்சத்திலிருந்து வருகிறது. கண்ணகியின் வளர்ப்பு, அவளுடைய ஆளுமையின் உருவாக்கம் அத்தகைய ஒன்றாக உருவாக்கம் செய்யப்படுகிறது. இது ஆரம்பத்திலேயே செய்யப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் முதல்காதை, மங்கல வாழ்த்துப்பாடல் 68 வரிகளே கொண்ட இந்தப்பாடலில் அவளுடைய திருமணம் பேசப்படுகிறது. அவரை கண்ணகி கோவலனுடைய இருபெரும் குரவரும் ஒரு பெரும் நாளால் மணம் காணமகிழ்ந்தனர் மகிழ்ந்து மாநகர்க்கீந்தார் மணம்' திருமண நிகழ்வின் இறுதியில் 'காதலற் பிரியாமல் - கவவுக்கை ஞெகிழாமல் - தீதறுக என்று வாழ்த்துகின்றனர்.

கண்ணகியைத்தான் வாழ்த்துகின்றனர். காப்பியத்தில் கண்ணகிதான் முதன்மையானவள். ஆசிரியர் இவளை முற்கூறினார் - ஏன்? கதைக்கு நாயகியாதலின் (அரும்பதவுரை); பத்தினியை ஏத்துதல், (சிலம்பின்) உட்கோள் ஆதலின் (அடியார்க்கு நல்லார்). இப்படிக் காப்பியத்தின் தொடக்கத்திலேயே, கண்ணகிதான் கதையின் நாயகி என்றும் அவள் பத்தினி என்றும் ஒரு படிமம் தயாரிக்கப்பட்டு விடுகிறது. இவள் பத்தினியேயாம் எனில் இவளைச்சுற்றி ஒரு தொன்மம் நினைவு கொள்ளப்படுகிறது. இவளை அறிமுகப்படுத்துகிற 26, 27வது அடியிலேயே இக்கண்ணகி, 'போதிலாள் திருவினாள்' அதாவது திருமகளுடைய வடிவம் என்று கட்டமைப்புச் செய்யப்பட்டுவிடுகிறது. மேலும், 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' அதாவது திருமகளுடைய வடிவம் என்று கட்டமைப்புச் செய்யப்பட்டுவிடுகிறது. மேலும், 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்றும் அக்கட்டமைப்பு நீள்கிறது. இதுபோக, முக்கியமாக அவளுடைய ஆளுமை, அவளுடைய புகழ் - அருந்ததியின் கற்பின் ஆற்றலோடு இணைத்துக் காணப்படுகிறது. ஒரு முறை அல்ல மூன்றுமுறை திரும்பத்திரும்பக் கூறப்படுகிறது.

"தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" [வரி, 27]

"சாலியொருமீன் தகையாள் [வரி, 51]

அங்கண் உலகில் அருந்ததி யன்னாள்" [வரி, 63]

அன்று பிரசித்தமாக இருந்த பத்தினிப்பெண் பற்றிய ஒரு தொன்மத்தோடு, வடமொழி - வைதீக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபில் செல்வாக்குமிகுந்ததாக இருந்த ஒரு தொன்மத்தோடு, திரும்பத் திரும்பப் பல பனுவல்களில் குறிப்பாகப் பெண்ணை உயர்வு செய்யும் பனுவல்களில் - உயிர்ப்புத் தன்மையுடன் கூடிய - ஒரு தொன்மத்தோடு கண்ணகியெனும் பெண், ஒரு மாபெரும் பத்தினி இணைத்துக் கூறப்படுகிறாள். மண்ணுலகம் அன்றி விண்ணுலகப் பொருள் (Celestial Being) ஒன்றோடு இணையாக கூறப்படுகிறாள், இவ்வாறு காப்பியத்தின் முதல் பாடலிலேயே, கண்ணகி, பெண்மைக்கும், கற்புக்கும் ஏற்புடைய ஒரு தொல்படிமமாக உருவகிக்கப்படுகிறாள். அடித்தளத்திலேயே வித்தூன்றப்பட்ட இந்தச் செய்திதான், சிலப்பதிகாரம் முழுமையும் பரவிப் படர்ந்து கிடக்கிறது இறுதிச் செய்தியாகவும் இது மலர்ந்து கிடக்கிறது. சிலம்பினுடைய தலைவியாகிய கண்ணகியை இளங்கோவடிகள் எங்கிருந்து கொண்டு வருகிறார்? எப்படி உருவாகிறாள், இவள்? சங்ககால வாழ்க்கை மரபிலிருந்தும் சங்க இலக்கியப் பனுவல் மூலங்களிலிருந்தும் சிலம்பின் கண்ணகி உருவாகியிருக்கிறாள். குறிப்புக்களாக இடம் பெறுபவை விரிவாகப் புனையப்படுவதும், ஒன்றுக்கு மேற்பட்ட இந்தக்கூறுகள் ஒன்றாக இணைந்து ஒரே தளத்தில் புனையப்படுவதும் என்பவை இதன் தன்மைகள், முக்கியமாக, இவை மூன்று :

1. அந்தக் கண்ணகியின் தொல்படிமமாக இங்கே சிலம்பில் கண்ணகி தோற்றுவிக்கப் பெறுகிறாள் என்று சொல்ல வேண்டும். புறநானூற்றில் கண்ணகி எனும் பெயரிலேயே ஒருத்தி வருகிறாள். "வையாவிக் கோப்பெரும் பேதனுடைய மனைவி கணவனின் கவவுக்கை ஞெகிழ," இன்னாரது இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள், முலையகம் நனைப்ப விம்மிக், குழலினைவது போல் பெரிதே அழுதனளாக இருப்பவள், அவள். (பரணர், புறநா., 143). இந்தக் கண்ணகிக்காகக் குரல்கொடுப்பவர்கள் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார்.

   அவளுடைய கணவன் யாரோ ஒருத்தி காரணமாக இவளைத் துறந்திருந்தான். அதேபோது, அவன் - பேகன் - கொடைமடம்படுத்தவன் ஆடிக்கொண்டிருந்த மயில், குளிரால் நடுங்குகிறது என்றெண்ணித் தான்போர்த்தியிருந்த போர்வையை, அதன்மேல் போர்த்தியவன். அதேபோல், இங்கு கோவலன் -கருணை மறவனாகவும், செல்லாச் செல்வனாகவும், பத்தினியொருத்தியின் சுற்றத்தோர்க்கும் கிளைகட்கும் 'பசிப்பிணியறுத்துப் - பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மலாக'வும் இருந்தவன். இப்படி ஒரு தொன்மத்தின் சாயலாகச் சங்ககாலத்துக் கண்ணகியின் கண்ணீரும் சிலப்பதிகாரத்துக் கண்ணகியின் கண்ணீரும் பெரிய கதைகளைச் சொல்லியவை.

2. சிலம்பின் கண்ணகி. வழக்குரைத்து நீதியை நிலைநாட்டியபின் வஞ்சினமாலை என்ற பாடலுக்குப்பிறகு, 'ஒரு முலையிழந்த திருமாபத்தினி' என்று பேசப்படுகிறாள், போற்றப்படுகிறாள், பாண்டியனிடம் வழக்குரைத்த கண்ணகி, தன் கணவன் மேல் சாட்டப்பட்ட குற்றம், பொய்யானது என்று நிரூபிக்கிறாள். அரண்மனையிலே நடக்கிறது இந்த வழக்குரைத்தல். ஆனால் ஊராருக்கு இது தெரிய வேண்டுமல்லவா, பாண்டிய மன்னன் செய்த குற்றம், அந்தப் பாண்டிய மண் செய்த குற்றமல்லவா? அந்த மதுரை செய்த குற்றமல்லவா? எனவே ஊர் பூராவும் அரற்றிச் செல்கிறாள். தன்னுடைய ஊராகிய பூம்புகாரைச் சேர்ந்த புகழ்பெற்ற ஏழுபத்தினிமார்களை நினைவுபடுத்தி, அவர்கள் போன்று 'பாட்டாங்கு யானுமோர் பத்தினியேயாமாகில் ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையும் ..... ' (வஞ்சினமாலை, 36 - 37) என்று, சினமேறிக் கொண்டு வஞ்சினம் கூறுகிறாள். அத்தோடு அமையாமல், இடது முலையைக் கையால் திருகியெடுத்து மதுரை நகரில் விட்டெறிகிறாள்.

   "யானமர் காதலன் தன்னைத் தவறியிழைத்த
   கோநகர்ச் சீறினேன் குற்றமிலேன் யான் என்று
   இடமுலை கையால் திருகி மதுரை
   வலமுறை இடமுறை வாரா அலமந்து
   மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
   விட்டாள் எறிந்தாள், "


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு காய்த்தியப் பொற்றொடி ஏவ, நற்றோரான் கூடல்நகர், புகையழல் மண்டிற்று.இது, காப்பியத்தின் எடுத்துரைப்போடு கூடிய ஒரு உண்மை (நிஉ வசரவா)இ அதனை இத்தகையதொரு உண்மையென வலியுறுத்தி வேண்டி ஒரு முலையிழந்த 'திருமாபத்தினி' எனப் பல இடங்களில் அவள் குறிப்பிடப்படுகிறாள். போற்றப்படுகிறாள். 'முலையினால் மாமதுரை கோளிழைத்தாள்' - எனினும் 'சிலம்பின் வென்ற சேயிழை நங்கை கொங்கைப் பூசல் கொடிதோ அன்று.' என்றும் போற்றப்படுகிறாள். பரவலும் பரவுமின் விரவுமலர்த் தூவுமின் ஒரு முலையிழந்த நங்கைக்குப் பெருமலை துஞ்சாது வளஞ் சுரக்க எனவே ... என்று வரந்தருகிற தெய்வமாகவும் ஆக்கப்படுகிறாள். ஒரு முலையிழப்பு என்பது, தமிழ்ச்சமூகத்தின் ஒரு தொன்மம். இது, பெண்மையின் சீற்றம், உடற்சிதைவு, தாய்மையின் துயரம் என்பவற்றிற்கு இலச்சினையாக வருகிற ஒரு செய்தி. சங்கப்பாடல்களில் வருகிற ஒரு தொல்படிமம். காக்கைபாடினியார் நச்செள்ளையார் எனும் பெண்பாற்புலவர், இதற்கு ஏற்புடையதாக ஒரு பெண்ணைக் கொண்டு வருகிறார் (புறநா., 278) ஒரு தாயினுடைய மகன், போர்க்களத்தே படையழிந்து மாறினான் என்று ஊரார் பலர் கூற இவள் சினந்து, அவ்வாறு அது உண்மையேயானால்,

**'முலையறுத்திடுவென், யான், என ... '**

வாளொடு அங்கே போகிறாள். ஆனால் அவன் மார்பிலே வெட்டுண்டு கிடந்தான் என்று நேரில் கண்டபின் ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தாள். எனவே இப்படி 'ஒரு முலையறுத்தல்' எனும் செய்தி தாய்மையின் அடையாளத்தோடும், வீரத்தோடும், கவுரவத்தோடும் தொடர்புபட்ட ஒரு பண்பாட்டு அடையாளமாக இங்கே வருகிறது.

சிலப்பதிகாரத்தில் பேசப்படும் ஒரு முலை யிழந்த கண்ணகிப் படிமத்திற்கு முன்னரே, நற்றிணையில் அத்தகையதொரு படிமம் ஒன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. ஒரு முலையறுத்தலுக்குரிய காரணம் அல்லது சூழல், நற்றிணையிலும் சிலப்பதிகாரத்திலும் ஓரளவு ஒத்ததாக உள்ளதென அறியலாம். நற்றிணையில் மருதத் திணைப்பாடல் ஒன்றில் இதனைப் பேசுகிறவர், மருதனிளநாகனார் இதே சொல்வடிவத்தோடு ஒருத்தி குறிக்கப்படுகிறாள்.

**'எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்**
**ஏதிலாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி'** [**நற்றிணை,** 216]

முன்னால் நடந்த ஒரு நிகழ்வைப் பலநாள் கடந்து வந்தும்கூட மறக்க முடியாத ஒரு 'நினைவு' போல இந்தப் பாடல், செறிவான ஒரு குறிப்பாகவும் தொன்மப்புனைவாகவும் இதனை இங்கே வழங்குகிறது. இந்தத் திருமாவுண்ணி ஒரு முலையறுத்தது, ஏதிலாளன் கவலையைப் போக்குவதற்காக என்றால், கண்ணகி கூடக் கோவலன் ஏதிலாளனாக அயலூரில் கொலை செய்யப்பட்ட சூழலில்தான், தன் இடது முலையைத் திருகி எறிகிறாள். மேலும், இந்தத் திருமாவுண்ணியும், எரிமருள் வேங்கை மரத்தோடு உறவுபடுத்திப் பேசப்படுகிறாள். கண்ணகியும் வேங்கை மரத்தினடியில் நின்றுதான் வானவூர்தி ஏறுகிறாள்.

3. கோவலன் மனைவி கண்ணகிக்கும், பாண்டியனின் மனைவி கோப்பெருந்தேவிக்கும் முன்னர் இருந்தவள், பூதபாண்டியன் மனைவி பெருகோப்பெண்டு. இவளுக்கு முன்னால் இருந்தது, ஒரு சமூக (வைதிக) வழக்கு. அதன்பின் உயிர்வாழும் மனைவி, பூவணைகள் துறந்து தரையில் பரல்கள் விரித்துப் படுத்துறங்க வேண்டும் நெய் தீண்டாத கைபிழி பிண்டம் உண்ணவேண்டும். புளிபெய்து அட்ட வல்சிக்கீரை உண்ணவேண்டும். வாள் அரிந்திட்ட அணில்வரிக் கொடுங்காய் தின்ன வேண்டும். இது, தாபதநிலை. கொடிய இந்நிலையைச் சகித்து வணங்கி வாழ வேண்டும். வாழ விரும்பாமல் கலகக்குரல் எழுப்பியவள், பெருங்கோப்பெண்டு. இதற்குப் பதிலாக ஈமத்தீயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து உயிர் துறக்கலாம் என்று கூறுகிறாள். சான்றோரும் உண்டுகொல், சான்றோரும் உண்டுகொல் என்று அரற்றுகிறாள். சிலம்புக்கண்ணகி அரற்றியதுபோல, அதற்குமுன் இங்கே இந்தப் புறநானூற்றுப் பெருங்கோப்பெண்டு, 'பல்சான்றீரே' என்று அரற்றித் தன்னுடைய கருத்தினை ஒரு சொல்லாடலாக - மறுதலிப்பாக - முன்வைக்கிறாள்.

**பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**

**உயவற் பெண்டிரேம் அல்லேம்.** (புறம் 246)

என்று கைம்மை நோன்பினை எதிர்த்துச் சினந்து அவள், இப்படிக் கூறுகிறாள். கைம்மை நோன்பு என்பது, பெண்களை அடிமைப்படுத்தும் கொடும் வழக்கு. இது சங்ககாலத்தில் எதிர் கவிதையாக எதிர் சிந்தனையாக முன்னிறுத்தப்பட்டது. இது, சிலம்பில் மறுவடிவம் பெறுகிறது. பெண்மையின் எழுச்சிக்கு அடையாளமாக விளங்கும் இந்தச் சீற்றம், கண்ணகியின் மூலம் மீண்டும் எழுகிறது. ஆனால், உண்மையில் சிலம்பில் ஈமத்தீ பற்றியோ,கைம்மை நோன்பு பற்றியோ பேச்சு எழுவதற்கு இடமில்லை எனினும், புறநானூற்றுப் பெருங்கோப்பெண்டை நினைவுபடுத்துகிறது போன்று கண்ணகியின் கூற்று அமைகிறது. 'துன்புறுவன நோற்றுத் துயர்உறும் மகளிர்போல் அவலங்கொண்டு அழிவலோ' என்று கண்ணகி அரற்றுகிறாள்.

**தம்முறு பெருங்கணவன் தழலெரியகம் மூழ்கக்**
**கைம்மை கூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப் போல்**
**இம்மையும் இசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ.**

கண்ணகியின் இந்தக் கோபம் எங்கிருந்து வருகிறது? பெருங்கோப்பெண்டு, கண்ணகியாக மீட்டுருவாக்கம் பெறுகிறான் - வேறொரு சூழலோடு. இந்தக் கண்ணகியிடம், இப்படிப் பெருங்கோப்பெண்டு இருக்கிராள் பேகனின் மனைவி கண்ணகியிருக்கிறாள் மருதனிளநாகனாரின் திருமாவுண்ணி இருக்கிறாள் பெருஞ்சினத்தின் அடையாளமாகவும், தனியொருத்தியாக நின்று (ஆண் துணையின்றி) போர்செய்து வெற்றிபெறக்கூடிய திறன் உடையவளாகவும் வீரத்தின் சின்னமாகவும் உள்ள கொற்றவை இருக்கிறாள். அந்தக் கொற்றவையின் கோயிலுக்கு முன்னால் இருந்துதான், இறுதியில் கண்ணகி தன்னுடைய மங்கல அணிகளை எல்லாம் உடைத்துப் போட்டு அந்தக் கோலத்துடன் மலைமீது ஏறுகிறாள். இப்படிப் பெண்மையின் எழுச்சியே, ஒருமொத்தமாக இணையூடு பனுவல்களின் Intex இணைந்த உறவுகளோடு மீட்டுருவாக்கம் பெறுகிறது. இல்லக்கிழத்தியாக இருந்து, கணவனுடைய சொற்காத்துச் சோர்விலாளாகவும், ஒரு மன்னனையே எதிர்த்து வழக்காடியவளாகவும், தமிழகமும் அண்டை நாடுகளும் போற்றி வழிபடுகின்ற பத்தினித் தெய்வமாகவும் ஒரு வகைமாதிரியாக, ஒரு தொல்படிமமாக உயர்ந்து நிற்கிறாள்.

வாசித்து அளிக்கப்பெற்றது
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
**மட்டக்களப்பு.**
08.09.2018


Digitized by Noolaham Foundation.

| | | |
|---|---|---|
| **கவியரங்கு** | : | **மட்டக்களப்பு கதிரவன் பட்டிமன்றம்** |
| **தலைமை** | : | **கவிஞர் அண்ணதாசன்** |
| **தலைப்பு** | : | **கண்ணகி வாழ்வியலில்....** |



| | |
|---|---|
| இல்லறம் | : புதுவையூர் பு.தியாகதாஸ் |
| கற்பு நெறி | : செல்வி தர்சினி நடராசா |
| நீதி | : சோலையூரான் ஆ . தனுஷ்கரன் |
| பொறுமை | : செல்வி மினோதினி வாசுதேவன் |
| ஊழ்வினை | : கவிஞர். அழகுதனு |
| தீரம் | : தவராஜா அமர்நாத் |

## 09 செப்டெம்பர் 2018, ஞாயிற்றுக்கிழமை - அமர்வு - I

# ஆய்வரங்கு (மு.ப 9.30 - பி.ப 12.35)
# இளங்கோவடிகள் அரங்கு

| | | |
|---|---|---|
| **பொருள்** | : | **கிழக்கிலங்கைப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள்** |
| **தலைமை** | : | **பேராசிரியர் சி.மௌனகுரு** |
| **ஆய்வுமதிப்பீட்டாளர்கள்** | : | **பேராசிரியர் செ.யோகராசா** |
| | | **திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்** |
| | | ((சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| | | **கலாநிதி சி.சந்திரசேகரம்** |
| | | (சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| | | **கலாநிதி வ.இன்பமோகன்** |
| | | (சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்கள் : **திரு.க.மோகனதாசன்**
(சிரேஸ்ட விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்)
**திரு.ச.மணிசேகரன்**
**சொ.பிரசாந்**
**திரு.த.ரமீஸ்குமார் (கவிஞர் ஆழிவேந்தன்)**

ஆய்வரங்க இணைப்பாளர் : **திரு. ச. ரகுபதி** (விழாக்குழு உறுப்பினர்)


**திரு.த.ரமீஸ்குமார்**


**சொ.பிரசாந்**


**திரு.ச.மணிசேகரன்**


**திரு.க.மோகனதாசன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் பெண் தெய்வ வழிபாட்டில் இசையின் வகிபங்கு:

**சிலப்பதிகார கானல்வரியில் குறிப்பிடப்படும் இசைச்சேதிகளை உள்ளடக்கிய ஆய்வு**



**க.மோகனதாசன்**
(சிரேஸ்ட விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

கிழக்கிலங்கைத் தமிழர் பண்பாட்டில் பெண் தெய்வ வழிபாடானது முக்கிய இடத்தினைப்பெறுகின்றது. பொதுவாக பெண் தெய்வ வழிபாட்டினை தாய்த் தெய்வங்கள், கன்னித் தெய்வங்கள் என இரு பிரிவுகளாக பிரிக்க முடியும். கிழக்கிலங்கைப் பெண் தெய்வ வழிபாட்டுப்பரப்பில் தாய்த்தெய்வங்களே அதிக முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. பெண்களை தாய்மையின் வடிவமாகவும், வளமையின் குறியீடாகவும் பார்த்ததனால் பெண் தெய்வ வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடாக மாறியது. ஆண்தெய்வங்கள் மீதில்லாத பயமும் மரியாதையும் பெண் தெய்வங்கள் மீது அதீதமாக வெளிப்படுவதை இந்த வழிபாட்டு முறைகளிலிருந்து காண முடிகின்றது. இவ்வழிபாடுகளின் போது இசைக்கென்று ஒரு தனியிடம் உண்டு. ஒப்பீட்டளவில் அதிகமான பெண் தெய்வ வணக்க முறையும் அதற்காக அதிகளவான இசைப்பாடல்களையும் கொண்டமைந்திருப்பது கிழக்கிலங்கைப் பெண் தெய்வ வழிபாட்டின் சிறப்பம்சங்களாகின்றன. அத்தோடு சிலப்பதிகாரத்தில் பெண் தெய்வ வணக்க முறைகள், அதன் உருவாக்கற் பின்னணி என்பன பற்றி தெரிவித்திருப்பதோடு குறிப்பாக புகார்க்காண்டத்தின் கானல்வரியில் இசை பற்றிய பல்வேறு செய்திகளையும் எம்மால் அறிய முடிகின்றது. இந்தப்பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு கிழக்கிலங்கையில் பெண் தெய்வ வழிபாட்டில் இசையின் வகிபங்கினை ஆய்வு செய்வதாக இந்த ஆய்வுக் கட்டுரையானது அமைகின்றது.

## நோக்கங்கள் :

- ☑ கிழக்கிலங்கை பெண் தெய்வ வழிபாட்டில் இசையினையும் அதன் செயற்பாட்டுத் தளத்தினையும் புரிந்து கொள்ளல்.
- ☑ தாய்த்தெய்வ வழிபாட்டில் இசையின் இயங்கு நிலையினையும் அதன் தேவை குறித்தும் ஆராய்தல்.
- ☑ தமிழர் இசை மரபானது அறாத்தொடர்ச்சியுடன் பயணிக்கின்றது என்பதனை சிலப்பதிகார கானல்வரி இசைப்பாடல்களின் தன்மைகளுடன் ஒப்பிட்டு நோக்குதல்.
- ☑ தாய்த்தெய்வ வழிபாட்டில் பிரயோக நிலையில் இருக்கும் இசையின் ஆற்றல் குறித்த பிரக்ஞையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல்.

## பெண் தெய்வ வழிபாடு

புராதன தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் ஆற்றல் நிலையை மூன்றாகப் பிரிக்க முடியும். அவை, கன்னி ஆற்றல், அன்னை ஆற்றல், முதுபெண்டிர் ஆற்றல் என்று அது வகையினைப் பெறும். இந்த ஆற்றல்களின் ஒட்டுமொத்தக் குறியீடாகவே தாய்த்தெய்வங்கள் கொண்டாடப்படுகின்றன அல்லது வணங்கப்படுகின்றன. பொதுநிலையில் தாய்த்தெய்வ ஆற்றல்களாக கருதப்படுபவற்றை பின்வருமாறு குறிப்பிடமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இயற்கையை ஏவல் கொள்ளுதல்:** நெருப்பு, மழை, நீர், காற்று முதலியவற்றை ஏவல் கொள்ளும் ஆற்றல்
- **அணங்காற்றல்:** எல்லை மீறிய சக்தி உடையதாக நம்பப்பெறுதல்.
- **காத்தல், அழித்தல்:** பகைவர், இயற்கை ஆகியவற்றிலிருந்து இனத்தைக் காத்தல், பகைவரை அழித்தல்
- **வருவது உரைத்தல்:** எதிர்காலத்தைக் கணித்துக் கூறும் சக்தி உடையவராகத் திகழ்தல்
- **ஆற்றலை மீள உயிர்ப்புப் பெறச் செய்தல்:** சடங்குகள், இசைப்பாடல்களால் ஆற்றலை உயிர்ப்புப் பெறச் செய்தல், மிகுதிப்படுத்திக்கொள்ளுதல்.
- **வளமை, செழுமை:** தம் இனத்தின் வற்றாத வளமைக்கும் செழுமைக்கும், இளமைக்கும் குறியீடாகத் திகழ்தல், வறட்சியைப் போக்குதல்.

பரிணாம வளர்ச்சியில் இரண்டு கால்களால் நடக்கத் தொடங்கிய மனித இனத்தின் ஆறாவது அறிவுக்கு வாய்த்த முதல் அறிதல் அனுபவமாக அச்சம் காணப்படுகிறது. இயற்கையின் எல்லையற்ற ஆற்றலும் விநோதங்களும் ஆபத்துக்களும் மனிதனுக்கு தொடர்ச்சியாக அச்சமூட்டிக்கொண்டே இருந்தன. பூமியின் கடைசி உயிரினமான மனிதர்களுக்கு கடவுள் தேவைப்பட்டதன் ரகசியமே இந்த அச்சம்தான். தனது பயிர்கள் இயற்கையின் சீற்றத்தால் அழிந்து போவதைக் கண்டு பயந்த மனிதர் ஆடுவதன் மூலமும், பாடுவதன் மூலமும் தன்னையும் தனது பயிர்களையும் பாதுகாக்கலாம் என எண்ணினர். பலவிதமான ஒலிகளை எழுப்பிய அவர்கள் அதன் வளர்ச்சிப் போக்கில் இனிய இசையையும் கண்டடைந்தனர். இனம் புரியாத இனிமையில் திளைக்க வைத்த அந்த இசையினை இயற்கைச்சக்திகளை மகிழ்விக்கும் பொருட்டு அர்ப்பணம் செய்ததோடு அதற்கான சடங்குகளையும் உருவாக்கினர்.

குறிப்பாக பழந்தமிழர் இயற்கையைக் கண்டு அஞ்சிய மனநிலையியிலிருந்து மாறி அச்சந்தரத்தக்க ஏதோ ஒன்று அதில் உறைகின்றது அதுவே நாம் அஞ்சத்தக்கது என்று கருதி, அச்சம் தருவதாகக் கருதிய அந்த ஆற்றலை, சூர் என்றும் அணங்கு என்றும் குறிப்பிடத்தொடங்கினர். அதாவது சூர் என்னும் சொல்லுக்கு அச்சம் என்றும் அணங்கு என்ற சொல்லுக்கு துன்பம் தருவது என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இதிலிருந்து அச்சம் தரும் தெய்வப் பெண் எனும் கருத்துக்கொண்ட ஆரணங்கு, சூரர மகள் என்பது போன்ற கருத்தியல்கள் உருவாகின்றன. இது பற்றித் தொல்காப்பியம்

'அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே [தொல்காப்பியம், பொருளதிகாரம்: மெய்ப்பாட்டியல்–8/1]

என அச்சமென்னும் மெய்ப்பாட்டிற்குக் காரண கர்த்தாக்களைக் குறிப்பிடுகின்றது. இதில் அணங்கு என்பதற்குப் பொருள் கூறும் பேராசிரியர், "அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் அசுரர் ஈறாகிய பதினென்கணனும் நிரயப்பாலரும், பிறரும் அணங்குதற்றொழிலராகிய சவந்தின் பெண்டிரும் உருமிசைத் தொடக்கத்தனவும்" என்கிறார். அத்தோடு,

"கட்புலனாகாமல் தம் ஆற்றலாற்றீண்டி வருத்தும்

சூர் முதலாய தெய்வங்களும் அணங்குதற்றொழிலுடைய பிறவுமாம்",

என்று விரிவான கூறுவதன் வழியாக "அணங்கு" எனப்படுவது, "வருத்தும் திறன் கொண்ட தெய்வசக்திகள்" எனப் புரிந்து கொள்ளமுடியும். நம்படப்பைச் சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து தாம்வேண்டு உருவில் அணங்குமார் வருமே ... (அகநானூறு. 158) என்ற அகநானூற்றின் பாடல்பகுதியில் அணங்கு தான் வேண்டிய உருவெடுத்து வரும் என்றும் இப்பொழுது மலைப்பூக்களைச் சூடிக்கொண்டு அணங்கு பெண்ணாக வந்திருக்கின்றாள் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளமையை நோக்கும்போது அணங்கும் சூரும் விரும்பும் வடிவம் எடுக்க கூடியன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடுத்த கட்ட நம்பிக்கையாக அமைந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகு சூர், அணங்கு முதலான அச்சத்தைத் தரும் இயற்கை இகந்த ஆற்றல்களே பின்னர் பல கிளைகளாகக் கிளைத்துப் பல்வகை நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றன. குறிப்பாகப் பழந்தமிழ் மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை இத்தகு சூர், அணங்கு முதலான இயற்கை இகந்த ஆற்றல்களிலிருந்தே நாம் இனங்காண முடிகிறது.

"மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி, தவளவாள் நகைச்சி,
நஞ்சு உண்டு கறுத்த கண்டி, வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி,
வளியுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து, அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை ஆட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி.

வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை!
இரண்டு வேறு உருவின் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல் பலர் தொழும்
அமரி, குமரி, கவுரி, சமரி,
சூலி, நீலி, மால் அவற்கு இளங்கிளை
ஐயை, செய்யவள், வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை, பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை, அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமர் இளங்குமரியும் அருளினள் –
வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே"

எனும் சிலப்பதிகார வரிப்பாடல் தாய்த்தெய்வத்தின் தோற்றம் அதன் வலிமை மற்றும் அத்தெய்வம் எடுக்கும் வடிவங்கள் என்பவற்றைக்கூறி நிற்கின்றது. மிக அமைதியாக வாழும் பண்பு கொண்ட பெண்கள் பாதிக்கப்படும் பொழுது, அவர்களின் வழமையான இயல்புக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில், வெகுண்டெழுந்து வெறிபிடித்தவர்போல நடந்து கொள்ளும் விதம் பிறருக்கு அச்சமூட்டும் வகையில் அமைந்துவிடும். பெண்களின் கர்ப்பப்பையில் நிகழும் மாறுதலுக்கும் கட்டுப்படுத்த முடியாத உணர்வின் வெளிப்பாடுகளுக்கும் தொடர்புள்ளது என உடலியல் மற்றும் உளவியல் மருத்துவர்கள் தெரிவிப்பதும் இங்கு நோக்குதற்குரியது.

இந்தப்பின்னணியில் சங்க இலக்கியங்களில் கூட தாய்த் தெய்வத்திற்கு வெறியாடல் நிகழ்ந்தமைக்கான குறிப்புகள் உண்டு. அகநானூற்றுப் பாடல் (270) ஒன்று 'கடல் கெழு செல்வி' எனும் தாய்த் தெய்வத்திற்கு ஆடுமகள் ஒருத்தி வெறியாட்டு நிகழ்த்தியமையை விவரிக்கிறது.

### கிழக்கிலங்கையில் பெண் தெய்வ வழிபாடும் இசையும்:

கிழக்கிலங்கை பெண்தெய்வ வழிபாட்டில் குறிப்பாக காளியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன் கண்ணகையம்மன், திரௌபதியம்மன், கடலாச்சியம்மன் போன்ற கிராமியத்தெய்வங்களே இங்கு ஆய்வுக்கான தெய்வங்களாக நோக்கப்படுகின்றன. சமஸ்கிருத மயமாக்கப்பட்ட பெண் தெய்வ வழிபாட்டு முறைகள் பற்றி இங்கு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இன்றைய காலகட்டத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட சமஸ்கிருத, ஆகம நெறிப்பட்ட வழிபாடுகள் பல இருந்த போதும், இன்றும் நம் மக்களைப் பண்பாட்டின் மீதும் கலாசாரத்தின் மீதும் ஒரு பிடிப்புடனும் ஈர்ப்புடனும் இயங்க வைப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய தெய்வ வழிபாடுகளே ஏனெனில் இவ்வழிபாடுகள் எந்தவித மதக் கோட்பாடுகளுக்கும் உள்ளடங்காமல் ஆகம விதிகளுக்கு உட்படாமல் தங்களுக்கேயுரிய சடங்காசாரங்களுக்குட்பட்டு கிராம மக்கள் விரும்பிய வண்ணம் நிகழ்த்தப்படுகின்றன. இது தெய்வங்களுக்குத் தகுந்தவாறும் இடத்துக்குத்தகுந்தவாறும் வேறுபடும். ஒவ்வொரு தெய்வமும் தனக்கெனத் தனித்த வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும். இவை பெரும்பாலும் ஆண்டிற்கு ஒரு முறையே இடம்பெறுகின்றன.

இவ் வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக் கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன. தெய்வங்களுக்கு ஆடு, கோழி போன்றவை பலியிடுவதும் வழிபாட்டு முறையாக அமைகின்றது. பலியிடப்படும் ஆடு, கோழிகள் ஆண் இனத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கும். 'பெண்ணினம் உற்பத்திக்கும் பெருக்கத்திற்கும் அவசியம் என்பதால் அவ்வாறு பலியிடப்படுவது இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழிபாட்டில் தெய்வமேறி ஆடும் ஆட்டம் இடம்பெறும். ஒருவர் மீது அவருக்குரிய தெய்வத்தினை பூசாரி தன் மந்திரத்தினால் வரவழைக்க அக்குறிப்பிட்ட நபர் தன்னை அத்தெய்வமாக நினைத்து கையிலே சிலம்பணிந்து, வேப்பிலை தாங்கி அபிநயித்து ஆடுவார். பூசாரியின் உடுக்கடியும் பறையொலியும் பாடல்களும் அவர் ஆடலுக்கு அணிசேர்க்கும். இத்தோடு அம்மானைக்காய், சேகண்டி, சவணிக்கை என்பனவும் இத்தெய்வங்களை ஆடவைக்க இசைக்கப்படும் இசை வாத்தியங்களாகும். மக்கள் அவரைச் சாமி எனவும் தாயே எனவும் அழைத்து தம் குறை கூறி அத்தெய்வத்திடம் வாக்குக் கேட்டு ஆறுதல் பெறுவர்.

தெய்வம் ஏறி ஆடுவோரை ஆட்டுவிக்க பாடப்படும் காவியம், தாலாட்டு, அம்மானை ஊஞ்சல் மற்றும் குளிர்த்தி பாடல்கள், இத்தெய்வ வழிபாட்டு முறைகளின் தனித்துவமான பாடல்களாகும். இப்பாடல்கள் உரிமையுடன் வேண்டுவதாகவும் நேரடியாக தாய்த்தெய்வங்களை அம்மா, அம்மா என நெருக்கமாக விழிப்பதாயும் அமையும். இது இப்பகுதி மக்களின் தனித்துவமான இசைப்பாரம்பரியமாக இருப்பதோடு மக்களின் துயர் துடைக்கும் மருத்துவ முறையாகவும் தொழிற்படுகிறது சூட்சுமமான இசையின் ஆற்றல் இத் தெய்வ வழிபாட்டில் பிரித்துப் பார்க்க முடியாத வண்ணம் ஒன்றினைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகிறது. இந்த இசையுடன் கூடிய வழிபாடு மனதை ஒரு நிலைப்படுத்தி செம்மைப்படுத்தும் வல்லமை கொண்டது. கூட்டாக மக்கள் ஒன்றிணைந்து வழிபாடு செய்வதற்கான சூழ்நிலையினையும் இது இலகுவாக ஏற்படுத்திவிடுகிறது. மக்களை ஈடுபாட்டுடன் பேதா பேதமின்றி உள்ளிழுக்கும் வேலையையும் இது செய்து விடுகின்றது.

### சிலப்பதிகார கானல்வரியில் இசைச்செய்திகள் :

கானல்வரி என்பது சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தில் அமைந்த கடற்கரைச் சூழலில் பாடப்படும் இசைப்பாடல்களாகும். தமிழ் இசை இலக்கண வரலாற்றைக் காட்டுவதான இப்பாடல்கள் இசைக்காரணம் எட்டுவகை யாழின் மாட்சி, யாழின் உறுப்புகள், இசை ஏழால் எண்வகை என்பவற்றோடு கானல்வரி பண்களாகிய விளரி செல்வழி, எனும் நெய்தல் நிலப்பண்களும், வரிப் பாடல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. வர்ணித்துப் பாடும் இசைப்பாடல்களே வரிப்பாடல்களாகும். துள்ளல், தூக்கல், அகவல், நடைபோட்டு ஒய்யாரமாய் ஓடுபவை. இது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியின்றி மயங்க வருவதாகும். இத்தன்மையால் தெய்வம் சுட்டியும் இயற்கையை வருணித்தும் பாடக்கூடிய வசதிபெற்றன இப்பாடல்கள். வரி என்பது பாடல், ஆடல் இரு கலைகளையும் குறிக்கும் ஒரு பொருள் சொல்லாகக் காணப்படுகிறது. சிலப்பதிகார வேட்டுவ வரி, ஊர்சூழ் வரி என்பன ஆடலையும், கானல் வரிப்பாடலையும் குறிப்பிடுவனவாகும். ஆற்றுவரி, சார்த்துவரி, முரிவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, சாயல்வரி, முகமில்வரி என பல வகைப்பட்ட வரிப்பாடல்களை இளங்கோவடிகள் கானல்வரியில் பயன்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றது. இயற்கையை வருணிப்பது ஆற்று வரி, தலைவரின் ஊரோடு பேரோடு சேர்த்து வருணிப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்த்துவரி, தன் உறுப்புகளால் பெயர்பெறல் முகமுடைய வரி மற்றும் முகமில்வரி, தெய்வத்தைப் பற்றியது தெய்வம் சுட்டியவரி என்பனவாக பொருள் கொள்ளப்படுகின்றது. முரிவரி என்பது தமிழர் தாள முறையையும் சந்தக்குறிப்பையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. தகிதமி தகதிமி-தா, தகதிமி தகதிமி - தா என்ற மத்தளச்சொல்லும் தனதன தனதன-னா, தனதன தனதன - னா என்பதான சந்தக் குறிப்பும் வந்திருப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. மயங்கு திணைநிலை வரிப்பாடல்கள், சாயல் வரி என்பன இசையாலும் திணைத்திறத்தாலும் களிப்புற்று மயங்குதலைக்குறிக்கின்றன. தெய்வம் சுட்டிய வரிப்பாடல்கள் தெய்வத்தன்மை பொருந்தியனவாக அமையப்பெற்றிருக்கின்றன.

"அழலணங்கு தாமரை யருளாழி யுடைய கோ னடிக் கீழ்ச் சார்ந்து
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்
தொழவணங்கு மன் புடையார் சூழொளியும் வீழ்கரியுஞ் சொல்லாவன் றே"

எனும் தெய்வம் சுட்டிய பாடல் இதற்கு சான்று பகர்கின்றது. மேலும் இசைக்கான வரையறைகளையும் இப்பாடல்களில் காணலாம். பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், செலவு, விளையாட்டு, கையூள், குறும்போக்கு எனும் ஏழால் இசைத்தன்மை பற்றிக்குறிப்பிடுகின்றது. அத்தோடு இசைக்கரணம் என பாடல் தொழிலை குறிப்பிடும்போது அதற்காக வார்த்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்பவற்றையும் பரிந்துரை செய்கிறது.

இக்கானல்வரிப்பாடல்கள் நாட்டார் பாடல்களில் தன்மையினைக்காண முடிகின்றது. அறுசீர் விருத்தம் கலிவிருத்தம் என இப்பாடல்கள் பெரும்பாலும் துறை விருத்தப் பாடல்களாகவே அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகிறது.

**சிலப்பதிகார கானல்வரியும் பெண் தெய்வ வழிபாட்டில் இசையும்:**

பெண்ணைக் காவிய நாயகியாக்குவது பெண்ணைத் தெய்வமாகப்போற்றுவது தமிழருக்கேயுரிய சிறப்பாகின்றது. சிலப்பதிகார வழக்குரை காதையில் கண்ணகியின் தலைவிரி கோலத்தைக் கண்ட வாயிற்காப்போன் பாண்டிய மன்னனிடத்தில் சொல்லும்போது வாசலில் வந்து நிற்கும் பெண் கொற்றவை அல்லள், காளி அல்லள் பிடாரி அல்லள் என்று பல பெண் தெய்வங்களின் பெயர்களை எல்லாம் சொல்லுகிறான்.

"வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்"

என்ற பாடலில் இதனைக்காணலாம். சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி, மாதவி வரலாறு மட்டும் உரைக்கும் நூலன்று. பெண்ணுரிமை பேசும் பேரிலக்கியமான சிலப்பதிகாரம் தமிழர்களின் மலையளவு இசையறிவை தெரிவிக்கும் ஈடிணையற்ற நூலாகும். சிலப்பதிகாரக் கதையோட்டத்தில் அந்தக் காலக்கூத்து இசையையும் நாட்டார் இசையையும் அல்லது வாய் மொழி இசையையும் கதைக்குப் பொருத்தமான இடங்களில் அமைத்து பெருமை சேர்த்துள்ளார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரிப்பாடல்கள் தமிழிசையின் பெருமையை தெரிவிக்கும் முக்கிய பகுதியாகும். பல்வேறு பண்களையும் இசைக்கருவி இசைக்கும் முறை இசைக்கலைஞர்களின் வரையறை, எந்த சூழ்நிலைக்கு எப்படிப்பாட வேண்டும் என்ற திணைக்கொள்கைகள் பற்றியெல்லாம் மாதவி கூற்றாகவும் கோவலன் கூற்றாகவும் இப்பகுதி பேசுகின்றது. பெருமைமிக்க ராகங்களில் ஒன்று பந்துவராளி ராகம். நாட்டுப்புற இசையிலிருந்து பிறந்த ராகங்களில் இதுவும் ஒன்று. பந்துவராளி என்றும் காமவர்த்தினி என்றும் இன்று


Digitized by Noolaham Foundation.

அறியப்படுகின்ற இந்த ராகத்தின் பண்டைய தமிழ்ப் பெயர் சாதாரிப் பண். எல்லோரையும் கூப்பிடுகிற ராகம் என இது பெயர் பெறுகின்றது. ஆடு மாடுகளை மேயவிட்டு இடையன் சூரியன் மறைகிற நேரம் எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டுவதற்கு உண்டாக்கும் ஒலியிலிருந்து பிறந்தது இந்த ராகம் என இசையறிந்தோர் கூறுவர். இந்த ஒலியிலிருந்து பிறந்த சாதாரிப்பண் தரும் சோக ரசத்தை மாலை வேளையில் கோவலன் பிரிவால் வாடும் மாதவி பாடுவதாக கானல் வரிப்பாடல்கள் சில அமைந்துள்ளன.

"ஆங்கனம் பாடிய ஆயிழை, பின்னரும்
காந்தள் மெல்லிரல் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச்செவ்வழிப்பாலை இசைஎழீஇப்
பாங்கினில் பாடி, ஓர் பண்ணும் பெயர்த்தாள்'

எனும் கானல்வரிப்பாடல் கைக்கிளைக்கான செவ்வழிப்பாலை பண் பற்றிக்குறிப்பிடுகின்றது. உண்மையில், சிலப்பதிகாரம் காப்பியமாக உருவெடுத்தபின் நாட்டுப்புற மக்களிடம் கதையாகவும், நாடகமாகவும் கூத்தாகவும் இசைப்பாடல்களாகவும் உருப்பெறுகின்றன. அவற்றோடு இந்த இசை மரபுகளும் தொடர்ந்து நாட்டார் மரபினூடே நின்றியங்குவதை இந்த பாடல்களின் தன்மைகளைக்கொண்டு அறியமுடிகின்றது. கிழக்கிலங்கை கிராமிய பெண் தெய்வ வழிபாடானது பத்ததி முறையினை அடிப்படையாகக்கொண்டது. இதில் இசையானது முக்கிய பங்கினை வகிக்கின்றது. இது தமிழிசை மரபினடியான நாட்டார் இசையாக இருக்கின்றது. இது மக்களின் உள்ளக்கிடக்கையினை வெளிப்படுத்துவதாகவும் கட்டுக்கள் இல்லாததாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் செயற்படுகின்றது. இவை கானல் வரியில் வருகின்ற 'நிலை வரிப்பாடல்கள்' வகையைச் சார்ந்ததாகவேயுள்ளன. இப்பாடல்கள் உள்ள நிலையை உள்ளபடி தெரியப்படுத்தும் பாடல்களாகும் சார்த்துவரிப்பாடல்கள் பாட்டுடைத்தலைவரை ஊரோடு இணைத்து வர்ணித்துப்பாடுவதாகும். இது முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச்சார்த்து என மூன்று வகைப்படும். தாய்த்தெய்வ வழிபாட்டில் பெரும்பாலும் முகச்சார்த்துவரி வகைப்பாடல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

எனும் முகமுடை வரிப்பாடல்களின் செல்வாக்கினை தாய்த்தெய்வங்களை விழித்துப்பாடும் பாடல்களில்காண முடியும். தமிழிசையில் ஒரு பெரும் பண் பாடி அதன் திறம் பாடுவதற்கு வழித் திறம் பாடுதல் என்று பெயர் பெறும். 'குழகனும் யாழினும் குரல் முதல் ஏழும் வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்' எனும் சிலப்பதிகார ஆதாரம் இதனைத் தெரிவிக்கின்றது. இம்மரபினை கிழக்கிலங்கைப் பெண்தெய்வ வவணக்க வழிபாட்டுப்பாடல்களிலும் காணக்கூடியதாகவிருக்கின்றது. கோடி ஜெபம் தியானத்திற்கு சமானம் கோடி தியானம் லயத்திற்கு சமானம் கோடி லயம் கானத்திற்கு சமானம் கானத்திற்கு சமானம் வேறில்லை என்று சொல்வதுண்டு. பக்தி என்பது ஒன்றுடன் நாம் ஒன்றுவது. பக்தி என்பதைக் கடவுள் நம்பிக்கை என்று பார்த்தாலும் அல்லது ஒன்றின் மேல் நாம் வைத்திருக்கும் தீவிர ஆசை என்று பார்த்தாலும், கடவுள் நம்பிக்கை இருப்பவர்களையும், இல்லாதவர்களையும் தன்னை மறக்கச் செய்வது இசை. கிழக்கிலங்கைத் தாய்த்தெய்வ வணக்க முறைகளில் பாடப்படும் பாடல்களால், இசைக்கப்பெறும் இசை வாத்தியங்களால் பக்தர்கள் தம்மை மறந்து தாமும் இசையாக ஆடுவதையும் பாடுவதையும் காண முடிகின்றது. இது கானல் வரி குறிப்பிடுகின்ற மயங்கு திணைநிலை வரிப்பாடல்கள், சாயல் வரிப்பாடல்கள் என்பன குறிப்பிடும் இசையாலும் திணைத்திறத்தாலும் களிப்புற்று மயங்குதலைக்குறிப்பதாகவே அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை:

கிழக்கிலங்கைத் தமிழர் பண்பாட்டில் முக்கிய இடத்தினைப்பெறும் பெண் தெய்வ வழிபாடானது தன்னகத்தே பல சிறப்பம்சங்களைக்கொண்டு காணப்படுகின்றது. இன்று நிறுவக மயமாகிப்போன ஆகமம் சார் வழிபாடுகளின் பின்னணியில் இத்தமிழ் மக்கள் தங்கள் உணர்வு நிலையோடு கொண்டாடும் தெய்வங்களாக கிராமியத்தெய்வங்கள் விளங்குகின்றன. மதங்கள் மதத் தீவிரவாதமாகப் புகட்டப்படும் இக்காலத்தில் அது, வாழ்வியலுக்கானது என்பதைத் தெரிவிப்பதும் இந்தக் கிராமிய வழிபாட்டு முறைகளே. இதிலும் குறிப்பாகத் தாய்மையின் வடிவமாகவும், வளமையின் குறியீடாகவும் திகழும் பெண் தெய்வ வழிபாடு கிழக்கிலங்கைத் தமிழர் பாரம்பரியத்தோடு இரண்டறக்கலந்திருப்பதோடு தமிழ்ப்பாரம்பரியத்தை சடங்கினடியாக இயங்கு நிலையில் இன்னும் வைத்திருக்கின்றது.

கிழக்கிலங்கைப் பெண் தெய்வ வழிபாட்டில் இசைக்கென்று தனியிடம் உண்டு, நாட்டார் இசை வடிவங்களான காவியம், தாலாட்டு, கும்மி, சிந்துநடை போன்ற பாடல் வகைகளும் பறை, உடுக்கு, சவணிக்கை, சிலம்பு போன்ற வாத்தியப்பாவனைகளும் இவ்வழிபாட்டு முறைகளில் முக்கிய இடத்தினைப்பெறுகின்றன. குறிப்பாக இச்சடங்குகளை இயங்கு நிலையில் வைத்திருப்பதற்கு இவ் இசை முறையே ஆதாரமாகின்றது. இந்த இசை மரபானது இன்று நேற்று வந்ததல்ல. ஆதியாம் தமிழரின் தமிழிசை மரபினடியாகவே இது எமக்குக் கிடைத்திருக்கின்றது. இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அதில் ஒரு விடயத்தினை ஒப்பிட்டு நோக்குவதாகவே இவ் ஆய்வு அமைந்திருக்கின்றது. இதன் மூலம் தமிழிசையானது தொடர்ந்து நிலைத்து நிற்றலில் இந்தச் கிராமியத்தெய்வ வணக்க முறையானது முக்கிய வகிபங்கினை எடுத்திருப்பது நிரூபணமாகும் அதே வேளை, இவ்வழிபாட்டில் பயன்படுத்தும் இசை மரபின் செழுமையும் பழமையும் உணரப்படுகின்றன.

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பண்பாட்டு இயங்கியலில் ஆரையம்பதி கண்ணகியம்மன் வழிபாடு



பிரசாத் சொக்கலிங்கம்

## அறிமுகம் :

மட்டக்களப்புப் பண்பாடு பன்முகத்தன்மையானது. இந்தப் பன்முகத்தன்மையான மட்டக்களப்புப் பண்பாட்டில், கண்ணகி வழிபாடும் அது சார்ந்து கட்டியமைக்கப்பட்ட பண்பாடும் அதிக செல்வாக்கைச் செலுத்தி வந்துள்ளது - செலுத்தி வருகின்றது என்பது நன்கறியப்பட்டதொன்றே. சிலப்பதிகாரத்தை அடியொற்றி மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை எனவும் முல்லைத்தீவில் சிலம்புகூறல் எனவும் யாழ்குடாநாட்டில் கோவலன் கதை எனவும் பிரதேசமயப்பட்டுள்ளமை பொதுப்படையாக அறியப்படுகின்றது. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு நிலைபெற இக்கண்ணகி வழக்குரையும் கோவலனார் கதையும் ஓர் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. கண்ணகி வழிபாட்டின் வளர்ச்சிப்போக்கில் கண்ணகி வழிபாடு சார்ந்த பண்பாடும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அஃதன்றி, மட்டக்களப்புப் பிராந்தியம் முழுதும் இக்கண்ணகி வழிபாடும், அதனோடு இணைந்துள்ள பண்பாடும் செல்வாக்குச் செலுத்தி வருவதும் முக்கியமானதொரு விடயமாகும். இவற்றைவிட முக்கியம் பெறும் விடயம், இலங்கையில் சில பிரதேசங்களில் கண்ணகி வழிபாடு அருகிக்கொண்டு செல்ல மட்டக்களப்பில் அது உயிர்ப்புடன் நின்று நிலைத்திருக்கிறது என்பதாகும். இதன் காரணமாக மட்டக்களப்புப் பண்பாட்டு இயங்கியலில் கண்ணகி வழிபாடும் அது சார்ந்து உருவான பண்பாடும் முக்கியமானதொன்றாக அமைந்துவிடுகிறது எனலாம். இப்பெரும் போக்கொன்றை இவ்விடத்து முழுமையாக விளக்கிவிடமுடியாது. எனவே இக்கட்டுரை ஆரையம்பதி கிராமத்தில் நிலவும் கண்ணகி வழிபாடு மற்றும் அதனோடு இணைந்து நிற்கும் பண்பாட்டை மட்டும் மையமாகக் கொண்டு சுருக்கமாக விளக்க முனைகின்றது.

## ஆரையம்பதியும் கண்ணகி கலாசாரமும்:

ஆரையம்பதி கிராமம் குருகுலத்தோர், செங்குந்தர், சலவைத்தொழிலாளர், பறையர், பணிக்கர் பொன்தொழிலாளர், வேளாளர் என பல்வேறுபட்ட சமூக பிரிவினர் சேர்ந்து வாழும் ஓர் கூட்டுக்கிராமம். ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு தெருக்களில் வசிக்கும் ஒழுங்கமைப்பு, இக்கிராமத்தில் பழங்காலம் தொட்டே வரையறுக்கப்பட்டிருப்பதால்தான் என்னவோ இன்றும் இக்கிராமத்தில் சாதிக்கொரு தெய்வம் தெருவுக்கு ஒரு கோயில் என்ற தன்மை காணப்படுகின்றது. எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குறித்த கோயிலை நிருவகிக்கும் அல்லது விழா நடாத்துவதற்கான வரியை செலுத்துகின்றார்களோ, அவர்களுக்குரியதாக அக்கோயில் கருதப்படும். இங்கு வரி என்பது கோயிலுக்கு உரிமை உடையவர்களாகக் கருதப்பெறும் சமூகத்தினரிடம் இருந்து அக்கோயில் விழா நடாத்துவதற்கு மற்றும் நிர்வாகரீதியிலான செயற்பாடுகளுக்காக அறவிடப்படும் பணம் அல்லது பொருளைக் குறிக்கும்.

ஆரையம்பதியில் வசிக்கின்ற வெவ்வேறு சமூகங்களுக்கென தனித்தனிக் கோயில்கள் காணப்பட்டாலும் ஊரின் நடுவில் அமைந்துள்ள ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயமும் அதற்கு அருகே அமைந்துள்ள கண்ணகை அம்மாள் ஆலயமும் காலத்தால் முந்தியவை என்பதும் ஊருக்குப் பொதுவான கோயில்கள் என்பதும் இங்கே தொன்று தொட்டு நிலவிவரும் எண்ணப்பாடுகளாகக் காணப்படுகின்றது. அதிலும் ஆன்மிகரீதியிலான நம்பிக்கைகளுக்கு மாத்திரமன்றி, ஊர் ஒட்டுமொத்தமாக ஒன்றுகூடும் பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகவும் ஊரின் அடையாளங்களில் ஒன்றாகவும் இங்கு கண்ணகி கோயில் விளங்குகிறது. இந்தப் பின்னணியில் ஆரையம்பதி கண்ணகி அம்மனின் வகிபாகத்தை புரிந்து கொள்ளல் வேண்டும்.

பல்வேறு சமூகங்கள் வாழும் ஆரையம்பதியில் பெரும்பான்மையினராக வசிக்கும் சமூகத்தினர் குருகுலத்தோர் எனப்படும் கரையார் சமூக மக்களாவர். இன்று ஆரையம்பதி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சடங்குவரி செலுத்துவதில் குருகுலத்தோரும் வேளாளரும் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். ஆரம்பத்தில் பொன்தொழிலாளர், பணிக்கர், செங்குந்தர் என்பவர்கள் வரிசெலுத்துதலில் இணைந்திருப்பினும் பிற்காலங்களில் இவர்கள் வரிசெலுத்துதலில் இருந்து விடுபட்டுவிட்டனர். இதன் அடிப்படையில் ஆரையம்பதியின் ஆதிக்குடிகளாக் அடையாளப்படுத்தப்படும் குருகுலத்தோர் கண்ணகி கோயில் கடமைகளிலும் சடங்குகளிலும் ஆற்றும் பங்களிப்புகள் முக்கியத்துவமுடையதாகும்.

பொதுவாகவே கோவலன் கதையின் அடிப்படையிலான வெடியரசன் - மீகாமன் தொன்மங்களின் வழித்தோன்றல்களாக, குகன்குலம் எனப்படும் முக்குவரும் - குருகுலம் எனப்படும் கரையாரும் கருதப்படுகின்றனர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்டத்தின் அடுத்த நாள் இடம்பெறும் திருவேட்டையின்போது மட்டக்களப்பின் எல்லாச் சாதியினரையும் நினைவு கூறி நிகழ்த்தப்படும் முட்டி கூறும் நிகழ்வு இடம்பெற்று வந்ததுண்டு. அதன்போது, தமது குலப்பெருமையை நிலை நிறுத்திக்கொள்ளும் போக்கின் வெளிப்பாடாக, குருகுலத்தார் பாடும் பாடல் பின்வருமாறு அமைகின்றது. (சிகரம் - 2016, பக் - 38).

“வச்சிரத் தேவரென மணிமுடி தரித்தவர்
வணிகர் தொழ நின்ற தூயோன்
மானாகர் மகளுக்கு நாகமணி ஈந்தவன்
வரிசை பத்தொன்பதுடையோன்
கொச்சி கொல்லம் கூலவூர் குருநாடு
கொண்டாடும் நகரமெல்லாம்
குருகுலத்தரசனென மணிமுடி தரித்த
கோமள சௌந்தராஜன்
எச்சபைக்கு சென்று போராடும்
ஈசனே தெய்வேந்திர ராஜதுரையே ... “

மேற்குறித்த பாடலில் தங்களின் வரிசை பத்தொன்பது எனவும் கண்ணகியிடம் வரம்பெற்ற மீகாமன் வழிவந்தவர்கள் எனவும் தங்களது தேசம் கொச்சி நாடு, கொல்ல நாடு முதலான சேரநாட்டு ஊர்கள் என்றும் முன்னெர் அடையாளப்படுத்தும் குருகுலத்தார், சேரநாட்டு தொடர்பினூடாக ஆரையம்பதியில் கண்ணகி வழிபாட்டை முன்னெடுத்துள்ளார்கள் என்பதை ஊகிக்க இடமுண்டு.

### ஆரையம்பதி கண்ணகியின் சடங்குகள்:

வைகாசிப் பூரணைக்கு எட்டு நாட்களுக்கு முன் திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகும் சடங்கு தினமும் அதிகாலையிலும் மாலையிலும் நடைபெறும். பகல் வேளைகளில் எந்தவொரு சடங்கும் இடம்பெறுவதில்லை. 5,6,7 மற்றும் 8 ஆம் நாள் அதிகாலைகளில் இடம்பெறும் இச்சடங்குகளில் முறையே கல்யாணச்சடங்கு கப்பல்காரர் சடங்கு, பச்சைகட்டிசடங்கு, திருக்குளிர்த்தி என்பன் முக்கியத்துவம் பெறும் சடங்குகளாகும்.

### கப்பல்காரர் சடங்கு :

கண்ணகியின் கால்சிலம்புக்கு நாகமணியைப் பெற்றுக்கொடுக்கக் கப்பல் படை நடத்தி வீரநாரணனையும் சகோதர்களையும் வென்ற மீகாமன் நினைவாக இச்சடங்கு நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றது. (ஆரையூர் கண்ணகை - வரலாறும் வழிபாடும் - பக். 37) இருப்பினும் இச்சடங்குகளைப் பற்றிய தேடல் புதிய பல பண்பாட்டு விடயங்களை நமக்குத் தருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல்காரர் சடங்கின் பெயரே நெய்தல் நிலக் குடிகளான குருகுலத்தவர், கப்பல் வைத்துக் கடலோடிய பரம்பரையினர் என்பதை நேரடியாகக் குறிக்கின்றது. மேலும் இன்றும் ஆரையம்பதியில் வழக்கில் உள்ள சம்மானோட்டி குடி, ஆறுகாட்டி குடி, மன்றுளாடி குடி, வங்காளர் குடி என்பவை நீர் சார் தொழில்களோடு தொடர்புபடும் நேரடிச் சான்றுகளாக விளங்குகின்றன.

இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்பு இவ்வூரில் பலர், நாவாய், ஒடம் மற்றும் சிறு கப்பல் சொந்தகாரர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்கின்ற (மூனாக்கானா - 2016) தகவலும் கப்பல்காரர் என்பதுடன் பொருத்திச் செல்கிறது. எனவே, கப்பலுக்குச் சொந்தக்காரர்கள் உபயம் செய்த சடங்கு 'கப்பல்காரர் சடங்கு' என்ற பெயர் பெற்றது என்பது வெளிப்படையாகின்றது. இதேபோன்ற கப்பலோட்டிய பரம்பரையில் வந்த இன்னுமொரு குழுவினர் 'பச்சைகட்டி சடங்கு உபயகாரர்களாகின்றனர். இக் கப்பல்களுக்கான தேவைகள் குறைவடைந்து நலிந்து போக அடுத்த தலைமுறையினர் மீன்பிடிகாரர்களாகப் பரிணமித்து 'வலைத்தத்தி' என்ற குழுவாக உருவாகியதுடன் அவர்கள் குறித்த கப்பல்காரர் மற்றும் பச்சைகட்டி சடங்கிற்கான உபயமளித்திருக்கின்றனர் பொதுவாக மட்டக்களப்புத் தேசத்தில் பின்பற்றப்படும் மருமக்க(ள்) தாயமும் தாய்வழி முதுசொமும் சொத்துரிமையில் மட்டுமன்றி ஆலயக் கடமைகளிலும் முழுமையான தாக்கத்தை செலுத்துகின்றது. ஒவ்வொரு சமூகமும் தமக்குள் உள்ளடக்கிய குடிமுறைமையின் அடிப்படையிலேதான் இந்தத் தாய்வழி முதுசம் பின்பற்றப்படுகின்றது. மட்டக்களப்பில் பெரும்பாலான கோயில்கள் இக்குடி முறைமையில்தான் இயங்குகின்றன. இதன் நீட்சிக்கு ஆரையம்பதியில் வாழும் குருகுல சமூகமும் உட்பட்டிருப்பதை அவதானிக்கலாம். ஆரையம்பதியில் குருகுலசமூகத்தின் தாய்வழிக்குடிகளாக அடையாளப்படுத்தப்படும்.

- புலவனார்குடி
- வங்காளக்குடி
- முதலித்தேவன்குடி
- வீரமாணிக்கன்குடி
- திருவிளங்குகுடி
- அலரித்தேவன்குடி
- ஆறுகாட்டிகுடி
- மன்றுளாடிகுடி
- விக்கிரமபாலசிங்கரெட்ணகுடி
- சம்மான்னொட்டிகுடி
- பத்தினியாச்சிகுடி
- பொன்னாச்சிகுடி
- குரவர்குடி
- கணபதியார்குடி
- சிறப்பினார்குடி

என்ற 16 குடியினரும் முழுக்க முழுக்க கந்தசுவாமி கோயில் விழாக்களிலும், கண்ணகி கோயிலின் கட்டாடியார்(பூசகர்) ஆக பொன்னாச்சிகுடி பரம்பரையிலும், தாய்வழிக் குடிமுறைமையே பின்பற்றப்படுகின்றது. ஆனாலும் கப்பல்காரர் சடங்கு, பச்சைகட்டிச் சடங்கு இரண்டிலும் இத் தாய்வழி குடி பின்பற்றப்படவில்லை. இச்சடங்குகளைச் செய்யும் குடும்பங்களில், ஒரு ஆணுக்குப் பின் பூசையை நடாத்தும் பொறுப்பு, அவரிலிருந்து அவரது மகனுக்கே இடம் மாறுகின்றது. அதாவது மட்டக்களப்புக்கே சிறப்பான தாய்வழி மரபுக்கு மாறாக தந்தை வழியில் இவ்விரு சடங்குகளுக்குமான உபயம் கடத்தப்படுவதைக் காணலாம். மட்டக்களப்பில் தாய்வழியிலிருந்து தந்தைவழிக்கு உரிமைகள் கைமாற்றப்பட்டதன் அடையாளமாக இந்தச் சடங்குகளை நாம் குறிப்பிட முடியும்.

இந்தத் தந்தைவழி சடங்குமுறையால் இரு சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. தொழில், திருமணம், ஏனைய சமூகக்காரணிகள் நிமித்தம், இந்தச் சடங்கைச் செய்யும் உரிமை பெற்ற ஒரு குடும்பம் வேறு ஊருக்கு இடம்பெயரும்


Digitized by Noolaham Foundation.

போது, அப்பூசை உரிமையும் ஆரையம்பதிக்கு வெளியே செல்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே எதிர்காலத்தில் அச்சடங்கு கைவிடப்படவோ, அல்லது உள்ளூர் மரபுகளைப் பேணாத இன்னொருவர் கைகளைச் சென்றடையவோ வாய்ப்புக்கள் உள்ளன. அதேபோல் இந்தத் தந்தைவழிச் சடங்கு முறைமையால் இந்தச் சடங்குகளைச் செய்யும் உரித்தைப் பெற்றிராத வேறு சமூகங்களும் அந்த உரித்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

**கும்பம் சுற்றுதலும் கோயிலகளின் உருவாக்கமும்:**

ஆரையம்பதியில் எப்படிச் சமூகத்திற்கு கோயில் அல்லது தெருவுக்கு ஒரு கோயில் உருவாகியது என்று தேடினால் அதற்கும் கண்ணகி கோயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. பெரும்பாலான கோயில்கள் 1940களின் பின்னர்தான் உருப்பெற்றன ஆரம்ப காலங்களில் கப்பல்காரர் பச்சைகட்டி சடங்கு முடிந்ததும் கண்ணகி கோயில் கும்பம் ஊர் சுற்றும். கும்ப ஊர் சுற்றுதலின்போது ஊரில் காணப்படும் முக்கிய நிலைகளில் குறித்த கும்பத்திற்கான விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும் அதற்காக முக்கிய நிலைகளில் விசேட பந்தல் அமைக்கப்படும். ஊரில் பேய் பிசாசு அனுகாவண்ணம் ஊரை புனிதப்படுத்தல் என்ற நம்பிக்கைகளை கொண்டும் ஆலயத்திற்கு சென்று வழிபட சந்தர்ப்பம் இல்லதவர்களுக்கு வழிபடக் கொடுக்கப்படும் சந்தர்ப்பமாகவும் இக்கும்பம் சுற்றல் ஊரார் தயைப்படுகின்றது ஆரையூர் கண்ணகை - வரலாறும் வழிபாடும் பக்-38

இவ் கண்ணகி அம்மன் கும்பத்தை வரவேற்கப் போடப்படும் பந்தல்கள் பிற்காலத்தில் மெல்ல மெல்ல கோயில்களாக உருவெடுக்க அவையும் நாட்டாரியல் வழிபாட்டை அடியெற்றி சடங்கு நடைமுறைகளை பின்பற்றத் தொடங்குகின்றன. இதன் அடிப்படையில் ஒவ்வொரு தெருவில் வாழும் சமூகங்களும் தங்களுக்கு ஒன்று ஒரு கோயிலை உருவாக்கிக் கொண்டன. அதேபோல் குருகுலச் சமூகம் வாழும் தெருக்களிலும் கோயில்கள் உருவாகின.

பெரும்பாலும் குருகுல சமூகத்தினர் வரி செலுத்தும் நாட்டார் வழிபாட்டுக்குட்பட்ட கோயில்களான ஆதிவைரவர் பரமநயினார், வீரமாகாளி கோயில்கள் அக்கோயில்களின் சடங்குகளின் போது ஒரு தினத்திய கண்ணசி கோயிலில் இருந்து பூசைக்குரிய புனிதப்பொருட்கள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். இதை படைப்பெட்டி எடுத்தல் என அழைப்பார்கள் ஆனால் சலவைத்தொழிலாளர் (வண்ணார்) சமூகத்தின் மாரியம்மன் பணிக்க சொண்டார் சமூகத்தின் பேச்சியம்மன், செங்குந்தர் சமூகத்தின் மாரியம்மன் போன்ற கோயில்களுக்கு இம் மடைப்பெட்டி சம்பிரதாயம் கண்ணகி கோயிலில் இருந்து நடைபெற்றதற்கான தகவல்கள் இல்லை கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன்வரை விஸ்வப்பிரம குலத்தாரின் தட்டார்! சமூகத்தின் வடபத்திர காளி கோயிலுக்கான மடைப்பெட்டி கண்ணகி கோயிலில் இருந்தே எடுக்கப்பட்டு வந்தது ஆனாலும் அன்று கண்ணகி கோயிலை முன் கதவு திறக்காமல் வாசல் படியில் வைத்தே மடைப்பெட்டியை எடுத்து சென்றனர். தற்போது இந்தடைமுறை வழக்கில் இல்லை.

**தெய்வமாடும் வழக்கமும் அதன் போக்கும்:**

நாட்டார் வழிபாட்டில் ஒரு கூறாக காணப்படும் உருவந்து ஆடும் முறையான தெய்வமாடல் அல்லது சாமியாடல் நெறிமுறை ஆரையம்பதி கண்ணகி கோயிலிலும் பின்பற்றப்படுகின்றது. கணணகி கோயிலில் தெய்வமாடுபவர்கள் பெரும்பாலும் குருகுல சமூகத்தினர் வரி செலுத்தும் நாட்டார் வழிபாட்டுக்குட்பட்ட கோயில்களான ஆதிவைரவர், பரமநயினார், வீரமாகாளி கோயில்களில் மட்டுமே ஆடும் நபர்கள் ஏனைய சமூகத்தினரின் ஆலயங்களுக்கு சென்று ஆடுவது மிகவும் அரிது. ஏனைய சமூகத்தினரின் கோயில்களில் தெய்வமாடுபவர்கள் வேறு நபர்களான இருப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோவலன் கதை படித்தல்:**

மட்டக்களப்பின் எல்லாக் கண்ணகி ஆலயங்களும் கண்ணகி வழக்குரையையே பாடும்போது. ஆரையம்பதிக் கண்ணகி அம்மன் கோயிலில் மாத்திரம் கோவலனார் கதை பாடப்படுவதை இன்னொரு தனித்துவமாகச் சொல்லலாம். கண்ணகி வழக்குரை. கோவலனார் கதை இரண்டுமே ஒரே நூலின் இருவேறு புவியியல் பிராந்தியப் பிரதிகள் என்கின்றபோது, ஆரையம்பதியில் கோவலனார் கதைக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் தனித்துவமானது என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

**கண்ணகியுடன் இணையாத கலைகள்:**

மட்டக்களப்பின் பிரதான கலையான நாட்டுக்கூத்தும் அதையொட்டிய நாடக மரபும் இணைந்து இந்த ஓர் நீண்ட கலை பாரம்பரியம் ஆரையம்பதிக்குக் காணப்படுகின்றது. ஊரில் எந்தவொரு திருவிழா நடந்தாலும் ஏதாவது ஒரு கலை நிகழ்வும் நிகழ்த்தப்படும். (ஆரையம்பதி நாடக மரபு - 2017) இந்தப் பின்னணியில் இதுவரையில் கண்ணகி கோயில் சடங்கு காலங்களில் எந்வெரு கலை நிகழ்வும் இடம்பெற்றதாக அறியமுடியவில்லை. மேலும் கண்ணகியுடன் இணைத்துப்பேசப்படும் வசந்தன், கொம்புமுறிகள்கூட இங்கு நடைபெற்றதாகத் தகவல்கள் இல்லை என்பவைகளும் அவதானத்துக் குள்ளாகின்றது.

**கல்யாணச்சடங்கு முடிந்த பின்னரே ஊரில் கல்யாணம் :**

பழந்தமிழர்கள் சித்திரைப் புதுவருடப் பிறப்பிற்குப் பின்னர் அடுத்துவரும் வைகாசி மாதத்தில்தான் திருமண வைபவங்களுக்கு நாள் குறித்து திருமணங்களை நடாத்துவார்கள். ஆனால் ஆரையம்பதி மக்களைப் பொறுத்தவரயில் சித்தரை வருடப்பிறப்புக்குப் பின்னர் அடுத்த மாதம் வைகாசி அம்பாளின் திருக்குளிர்த்தி நிறைவுபெற்றதன் பின்னரே திரும்ண் நாட்கள் அமையுமாறு நாள் குறிக்கப்பட்டு திருமணங்கள் நடாத்தும் வழக்கத்ததைத் கடைப்பிடிக்கின்றனர் அம்பாளின் கல்யாணச்சடங்கின் பின்பே தங்கள் வீட்டு கல்யாணம் நடாத்தப்பட வேண்டும் என இங்கு எழுதப்படாத வழக்கமாகக் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பதனூடக மக்களின் பண்பாட்டு பழக்கவழக்கங்களில் கண்ணிகி வழிபாடு ஏற்படுத்திய தாக்கத்தை உணரமுடியும்.

**சமுகங்களின் பங்களிப்பு :**

குருகுலத்தோர் தவிர்ந்த வேளாளர். தட்டார், பணிக்கர், செங்குந்தர் போன்றோர் சடங்குவரி செலுத்தி கண்ணகி கோயில் கடமைகளில் பங்களிப்பதும். சலவைத்தொழிலாளர்கள் 'கட்டாடி என்ற ஆலய கடமைகளை மேற்கொள்ளும் பங்களிப்பைச் செய்வதும். முக்கியமான ஆலயத்தில் பறைமேளம் இயற்றும் ஆரையம்பதி பறையர் சமூகத்தினர் இன்றும் கண்ணகி கோயிலுக்கு எதுவித உபகாரமும் அதாவது சம்பளம் இன்றி தங்களது கலைச் சேவையைத் தொண்டாக ஆற்றுவதும் என்ற கண்ணகி கோயிலுக்கான பங்களிப்புகளினூடாகச் சாதியமும் நடைமுறைகளும் தனித்தனிப் பிரிகோடுகளைக் கொண்டிருப்பினும். பொதுத்தளத்தில் நேர்கோட்டு ஊடுபாய்வினை தரிசிக்கக் கூடிவாறு காணப்படுகின்றன.

**முடிவுரை**

தமிழரின் சமூக இயங்கியலில் சாதிகள் மிகப்பழங்காலந்தொட்டே தவிர்க்கமுடியாத இடம் வகித்து வருகின்றன. சமூகவியல்ரீதியிலும் மானுடவியல்ரீதியிலும் அவை சமூகமொன்றைக் கட்டியமைப்பதில் இன்றியமையாத கூறாக இருந்து வருகின்றன. சமகாலத்து முற்போக்கான சூழலில் சாதி அடையாளம் சார்ந்து பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்படும் போதும். பண்பாடொன்றைக் கட்டியெழுப்புவதில் சாதிகள் புறக்கணிக்க முடியாதவை.

அந்தவகையில், ஆரையம்பதி கண்ணகி அம்மன் ஆலயமானது. ஆரையம்பதியில் வாழும் குருகுலத்தவர். வேளாளர், செங்குந்தர், பணிக்கர், பொன்தொழிலாளர், சலவைத்தொழிலாளர் உள்ளிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு சமூகத்தினர் ஒன்றுகூடும். அந்தச் சமூகங்களின் சமூக இயங்கியலைச் சீரமைக்கும் மையப்புள்ளியாக விளங்கி வந்திருக்கிறது. மேற்படி எல்லாச் சமூகங்களும் வேறு பல சமூகங்களும் சேர்ந்தே மட்டக்களப்புத் தமிழர்' எனும் அடையாளத்தை உருவாக்குகின்றன என்ற வகையில், மட்டக்களப்பு இயங்கியலில் சமூகவியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுக்குரிய பல்வேறு விடயங்களை ஆரையம்பதி கண்ணகி அம்மன் ஆலயம் இன்றும் தன்வசம் கொண்டுள்ளது. அவற்றை வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்து கண்ணகி வழிபாடு சார்ந்த பொதுத்தளத்தில் வைத்து, ஆய்வு இடைவெளிகளை நிரப்பவேண்டியது அறிஞர் கடனாகும்.

**அடிக்குறிப்புகள்:**

- ஆரையூர் கண்ணகை - வரலாறும் வழிபாடும்' (2017) க.சபாரெத்தினம் - சொ.பிரசாத்
- ஆரையம்பதி கண்ணகி வரலாறு' (1999) ப.பொன்னையா (கையெழுத்துப்பிரதி)
- ஆரையூர் கந்தன்' (1999) - கந்தசுவாமி ஆலய கும்பாஷேக மலர்
- ஊர்பெரியர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டது, களஆய்வில் அறிந்து கொண்டவை மற்றும் ஆலயங்களின் சடங்கு பிரசுரங்கள்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கைப் பண்பாட்டில் செங்குந்தகுல மாரியம்மன் வழிபாடு

ச.மணிசேகரன்



பொதுவாக மாரியம்மன் வழிபாடானது இந்தியாவில் தமிழ்நாட்டிலும் இலங்கையில் வடக்கு. கிழக்கு. மலையகம் எங்கணும் காணப்படுகிறது. அவை அந்தந்த பிரதேச பண்புகளுக்கேற்ப தனித்துவமான வழிபாட்டு முறைகளைக் கொண்டு காணப்படுகிறது.

தமிழகமெங்கணும் பரவலாக மாரியம்மன் வழிபாடு காணப்படுகிறது. என்றாலும் தென்மாவட்டங்களில் இவ்வழிபாடு அதிகம் கோட்டை மாரியம்மன். இருக்கண்குடி மாரியம்மன், வீரபாண்டி மாரியம்மன் என்ற பெயரில் மாரியம்மன் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது.

மாரி - மழை, மாரியம்மன் வெம்மையை போக்கி குளிர்ச்சியை தருபவள். மழையாகப் பொழிந்து மண்ணில் உயிர்களைக் காப்பவள் என்ற நம்பிக்கையில் மழைத் தெய்வமாக வழிபடப்படுகிறாள். மாரியம்மன் வழிபாட்டுச் சடங்கின்போது சக்திக் கரகம் நீரால் நிரப்பப்படுவதும், அது அம்மனாக வழிபடப்படுவதும் வழிபாடு நிறைவடையும் நிலையில் கரகத்திலுள்ள நீர், நீர்நிலைகளில் விடப்படுவதுமாகிய செயல்கள் மாரியம்மன் மழைத் தெய்வமாக வணங்கப்படுவதற்குச் சான்றாக அமைகின்றன.

